Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-17 30-04-2005 சனிக்கிழமை ஓசை 71


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11478)



## தேசியத் தலைவரினால் வெளியிட்டு வைக்கப்பட்ட "விழிநிமிர்த்திய வீரம்" ஒலிப்பேழை அறிமுகவிழா

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்ட சோதியா படையணியின் "விழிநிமிர்த்தியவீரம்" ஒலிப்பேழை அறிமுக விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

போர்ப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற தீச்சுவாலை முறியடிப்பு வெற்றி நாளன்று இந்த ஒலிப் பேழை கேணல் தீபனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

கேணல் தீபன் ஒலிப்பேழையை வழங்க மேஜர் சோதியாவின் தாயார் அதனைப் பெற்றுக் கொண்டார்.

மேஜர் சோதியாவின் 15ஆம் ஆண்டு நினைவு நாளான கடந்த சனவரி 11ஆம் திகதியன்று இவ் ஒலிப்பேழை தேசியத் தலைவர் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தது. இதனைத் தேசியத் தலைவரிடமிருந்து கேணல் விதுசா பெற்றுக்கொண்டார்.

# கடத்தப்பட்ட ஊடகவியலாளர் டி. சிவராம் சடலமாக மீட்பு!

## பாராளுமன்றத்திற்கு அருகே பாலத்தடியில் கண்டெடுப்பு

(கொழும்பு)

**கொழும்பு பம்பலப்பிட்டியில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட பிரபல இராணுவ ஆய்வாளரும், ஊடகவியலாளருமான டி.சிவராம் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இவரது சடலம் நேற்று அதிகாலை சிறிலங்கா பாராளுமன்றக்கட்டடத்திற்கு அருகே உள்ள தியவதன ஆற்றின் ஜப்பான் நட்புறவுப் பாலத்தடியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

முகத்தினை மூடி துணியால் கட்டப்பட்டு வாய்க்குள் துணி திணிக்கப்பட்ட நிலையில் தலையில் சூட்டுக்காயங்களுடன் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தனது நண்பர் ஒருவருடன் நேற்று முன்தினம் இரவு வீதியால் வந்து கொண்டிருந்த போது

(12ஆம் பக்கம் பார்க்க)



## துணிந்து உண்மையை எடுத்துரைத்தவரின் படுகொலையால் அதிர்ச்சியடைந்துள்ளோம்

### - ஜப்பானியத் தூதுவர் அறிக்கை

சிரேஷ்ட ஊடகவியலாளரும், துணிந்து உண்மையை எடுத்துரைத்து வந்தவருமான தர்மரத்தினம் சிவராம் படுகொலை செய்யப்பட்ட செய்தி யறிந்து அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்துள்ளதாக சிறிலங்காவுக்கான ஜப்பான் தூதுவர் அக்கியோ சூடா நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை யில் தெரிவித்துள்ளார். சிவராமின் குடும்பத்தினருக்கும், அவரது நண்பர்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித் துள்ள ஜப்பான் தூதுவர், இவரின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கும் பொதுக்கட்டமைப்பிற்கும் தொடர்பில்லை

### சிறிலங்காவின் நிதியமைச்சின் செயலாளர் கூறுகின்றார்

(கொழும்பு)

அடுத்த மாதம் கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்திற்கும், பொதுக்கட்டமைப்பு விவகாரத்திற்கும் இடையே எவ்வித தொடர்பும் கிடையாது என சிறிலங்காவின் நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டம் கண்டியில் நடைபெற வுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஊடகவியலாளர் சிவராம் படுகொலைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பலத்த கண்டனம்!

### சிறி. புலனாய்வுத் துறையும் தமிழ் தேச விரோதக் குழுக்களுமே கொலைக்குக் காரணம் எனவும் குற்றச்சாட்டு

தமிழினத்தின் மிகச் சிறந்த ஊடகவியலாளரான தராக்கி டி.சிவராம் கொழும்பில் கடத்திக் கொல்லப்பட்டுள்ளார். சிறிலங்கா அரசின் இராணுவப் புலனாய்வுப் பிரிவும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் தமிழ் விரோதக் குழுக்களுமே இக்கொலைக்குக்காரணமாகும். சிவராமின் இந்தக் கொலைச் சம்பவம் தமிழ் மக்களிடத்திலும், ஊடகவியலாளர்கள் மத்தியிலும் மிகப்பெரும் அதிர்ச்சியையும், கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது என்று ஊடகவியலாளர் டி.சிவராம் படுகொலை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தராக்கி என்றும் டி.சிவராம் என்றும் நன்கறியப்பட்ட திரு.தர்மரத்தினம் சிவராம் அவர்கள் மிகத் துணிச்சலானதொரு ஊடகவியலாளர். எவ்வகையான நெருக்கடிச் சூழ்நிலைகளிலும் எதற்கும் அஞ்சாது துணிச்சலாகச் செய்திகளையும் கருத்துக்களையும் முன்வைத்து வந்தவர். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் சர்வதேசம் நன்கறிந்த சிறந்த தமிழ் ஊடகவியலாளராகச் செயற்பட்டு தமிழ்மக்களின் பிரச்சினைகளை வெளி உலகிற்கு எடுத்துச் சொன்னவர். தனது ஊடகப் பணியினூடாக தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்த முனைந்து உழைத்தவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தன்னை நீண்ட காலமாகவே தெளிவாகவும், உறுதியாகவும் பிணைத்திருந்தவர் சிவராம். சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் எண்பதுகளின் தொடக்கத்திலிருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்


### வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரத்தில் அழககம் (சலூன்) ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். சம்பளம் பேசித்தீர்மானிக் கப்படும். தொடர்புகளுக்கு:- "பொதிகை அழககம்" கனகபுரம் தெரு, கிளி நொச்சி. (6072)

### 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசாயனவியல் வகுப்பு- புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளி நொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்- சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

### சீமெந்துக்கல் விற்பனைக்கு உண்டு

அன்புவாணிபத்தில் சீமெந்துக் கல் விற்பனைக்குண்டு.அளவு-"6X4" X12" கிடைக்குமிடம் அன்பு வாணிபம், அந்தோனியார் கோவிலடி,அளம்பில் விலை ஒருகல் 20/=. (5919)


# பலத்துடன் இன்றும் பலம் கொடுங்கள் வெற்றிகளுடன் இன்னும் வெற்றி சேரும்!

## மு.மா.கூ.தொ ஒன்றியம் மேநாள் அறைகூவல்

(முல்லைத்தீவு)

தமிழ்த் தொழிலாளர்களே! கொடுத்த பலத்துடன் கொடுங்கள் இன்னும் பலம். எடுத்த வெற்றிக ளுடன் இன்னும் வெற்றி சேரும். பருத்த எம்வாழ்வு பாரில் நாளை உயரும் என முல்லை.மாவட்ட கூட்டுறவுத் தொழிலாளர் ஒன்றியம மேநாள் தொடர்பாக வெளியிட் டுள்ள செய்திக்குறிப்பில் தெரி வித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது, தொழிலாளர்கள் ஒன்றுகூடி தொழிலுக்கு உரிமை யும், உரிய வேதனமும், தொழில் வான்மையும், ஓய்வும் கிடைக்க வேண்டியும், கிடைத்தவைக்கு நன்றி தெரிவித்தும் மகிழும் நாள் மே நாள். எங்கள் மண் ணில் எத்தனையோ மே நாள் கடந்துவிட்டன. எங்கள் தொழிலாளரின் கோசங்கள் வானையும் பிளந்த காலங்கள் உண்டு. ஆனால், யாவும் பல னற்ற கோசங்களாகவே சென்று விட்டன. மாறிமாறி வரும் சிங்கள அரசுகளின் இனவாதச் சிந்தனை யால் எந்தத் தொழிலும் எந்தத் தொழிலாளரும் சீரான உரிமைக ளையும் சீரான வருமானத்தையும், சிறப்பான வாழ்வையும் பெற முடியாமல் உள்ளனர்.

விவசாயம், கைத்தொழில் வியாபாரம், கூட்டுறவு, மீன்பிடி யாவுமே எதிர் நீச்சல் போட்டு வாழ வளர வேண்டிய தொழில் களாகவே இருந்து வருகின்றன. அரசின் உறுதியற்ற பொருளா தாரத் தன்மையும் தமிழ்ப்பிர தேசங்களை ஓரம் கட்டி விடும் இயல்புகளாலும், திட்டமிட்ட இனவாத நடவடிக்கைகளாலும் எங்களது மண்ணில் வாழும் ஒவ் வொரு தொழிலாளரும் சொல்லொணாத் துன்பப்பட்டே வாழ்கின்றார்கள். முதலீடு இல்லை. முதலீடு இருந்தால் சந்தை இல்லை. அரச உதவிகள் இல்லை. உறுதியற்ற விலைத் தளம்பல், விலைவாசி உயர்வு என்ற தடைகளை அடுக்கிச் செல் லலாம்.

இவற்றால் அரசசார்பற்ற தொழிலாளர்களும் வாழ்வை ஓரளவுக்காவது நேர்பாதையில் கொண்டுசெல்ல முடியாது தவிக் கின்றார்கள். வடக்குக் கிழக்கில் வாழும் கூட்டுறவு நிறுவனங்கள் பக்கம் பார்வையைச் செலுத்தி னால் எத்தனையோ மூத்த நிறு வனங்கள் மூடு விழாவைக் கண்டு விட்டன. இருக்கும் நிறுவனங் களும் போராலும் அரசியல் பொருளாதாரத் தடைகளாலும் மீள முடியாது வாழ்வா? சவா? எனத் திணறிக்கொண்டிருக்கின் றன. பணியாளர்களைப் பார்க்கின் போர் அனர்த்தங்களைச் சுமந்து கொண்டு சமாதான காலத்திலும் மீட்சியின்றி வதைபடுகின்றார்கள்.

மூன்றாண்டு சமாதான காலம் முடிந்துவிட்டது. அரசு எந்த ஒரு மீட்சியையும் தரவில்லை. சுனா மிக்காகக் கிடைத்த சர்வதேச உத விகளைக் கூட பொதுக்கட்ட மைப்பு உருவாக்கி தமிழர்களுக் கும் அழிந்தவற்றில் ஒருபகுதியே னும் வழங்க இன்னும் அரசு மறுத்து வருகின்றது. இவற்றால் வழமையான வாழ்வு இல்லை என்பதை விட வரண்டு போகும் உளச்சோர்வு அதிகமாகி விட்டது.

கடந்த கால கொடும் போர் நட வடிக்கைகளால் சின்னாபின்ன மான தொழில் கட்டுமானங்கள் இன்று கடல் கோளினாலும் மேலும் சீரழிந்துவிட்டது. முல்லை மாவட் டத்தில் வளம் நிறைந்த முக்கிய பகுதிகள் அலையால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. எத்தனையோ தொழில் நிறுவனங்கள் தங்கள் அடிப்படைச் சொத்துக்களை இழந் திருக்கின்றன. ஒட்டு மொத்தமாக எம்மினத் தொழில் வர்க்கத்துக்கு கிடைத்த சாபக்கேடுகளே இவை யாகும். ஒவ்வோர் மேநாட்களில் எங்கள் பிரச்சினைகளையும் உரக்கச் சொல்வது தான் வழக்க மாகி விட்டது. கிடைக்கும் பலன் எதுவும் இல்லை. ஆதலால் எங்கள் மண்ணில் வாழும் தொழிலாளர்கள் இந்த நாளில் மேலும் ஒன்றுபட்டு விடுதலை வேண்டிப் போராடும் தேசியத் தலைமைக்குக் கரம் கொடுக்க உறுதி எடுப்போமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (19)


# கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோர் மீது கலாச்சாரம்பேணும் குழு நடவடிக்கை

(குப்பிளான்)

பொது அமைப்புக்களின் வேண்டுதலின் பெயரில் குப்பி ளான் பகுதியில் கசிப்பு உற்பத்தி யில் ஈடுபட்டவர்கள் மீது கலாச் சாரத்தைப் பேணும் குழுவினர் நட வடிக்கை எடுக்கத் தொடங்கியுள் ளனர்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குப்பிளான் பகுதியைச் சேர்ந்த நால்வர் மீது கலாச்சாரத் தைப் பேணும் குழுவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு கசிப்பு மற்றும் கசிப்புக் காய்ச்சும் உபகரணங்கள் என்பவற்றையும் அழித்துள்ளனர்.

இதேவேளை குப்பிளான் ஏழா லைப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி நாளுக்கு நாள் அதிகரித் துக் காணப்படுகின்றது. பொலிசா ரும், மதுவரித் திணைக்களத்தி னரும் இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே பொது அமைப்புக்கள் கலாச்சாரத்தைப் பேணும் குழுவினரின் உதவியை நாடியுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். (41)



உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் நூலகம் அமைக்கப்படுவதற்காக நிரந்தரக் கட்டடம் கட்டப்பட்டு நீண்ட நாட்களாக முடிக்கப்படாமல் உள்ளதைப் படத்தில் காணலாம். (படம். சிவா)

# துணுக்காய் வலயத்தில் தெரிவான தொண்டராசிரியர் விபரம்

துணுக்காய் கல்வி வலயத் தில் தொண்டர் ஆசிரியர்களுக் கான நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரம் வெளியாகியுள்ளது. மே மாதம் 20,21 திகதிகளில் திணைக்களத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். மு.பாலைப் பாணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஜெகன், மு.பாண் டியன் ம.வி ச.ஜெயவதனி, மு.நட்டாங்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை சி.சிவதர்சினி, சூ.வனிதா, மு.பனங்காமம் பூவரசங்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாட சாலை கு.ஜெகதீசன், உ.சுபாஜினி, மு.சிறாட்டி குளம் அரசினர் தமிழ் க.வி கு.மதியழகன்,

மு.தென்னியங்குளம் அரசினர் தமிழ் க.வி செ.செல்வகுமார், மு.புத்துவெட்டுவான் அரசினர் தமிழ் க.வி ச.பிறேமினி, மு.துணுக் காய் அரசினர் தமிழ் க.வி த.சிவலிங்கம், வை.கோகுலதாஸ், ந.கவிதா, மு.அனிஞ்சியன்குளம் த.க.வி செ.லீலாவதி, நா.அருந் தினி, சு.சுபநேசன், சி.சிவபாலன், சி.சிவரூபி, வை.நளாயினி, சோ.எழிலரசி, மு.ஆலங்குளம் அ.த.க பாடசாலை சி.சிந்துயா, இ.பூமலர்,

மு.வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க.வி பா.மோகனா, மு.தேராங கண்டல் படிவம் 4 அ.த.க. பாடசாலை இ.வினோதன், கு.ரதீஸ் குமார், கு.பார்த்தீபன், அ.தெய் வதர்சினி, தி.தயானந்தன்,

மு.முத்தையன்கட்டு வலது கரை அ.த.க.பாடசாலை இ.யசோ தினி, கா.ஆனந்தகுமாரசாமி, ப.துஷ்யந்தன், தி.வேணுகா, சி.யோகமலர், த.சிவரூபி, ம.ஸ்ரீ காந்தன், சி.அருந்தவலக்சுமி, ஒட்டுசுட்டான் ம.வி சி.சுபாஜினி, சே.தர்சினி, பெரியகுளம் அ.த.க பாடசாலை அ.சிவகுமார், ஏ.ஜெய ராஜ், மு.கரிப்பட்ட முறிப்பு அ.த.க. பாடசாலை கு.ஜெனகன், கா.கைலாசபிள்ளை, மு.மாங் குளம் ம.வி இ.இரவிச்சந்திரன், இ.சசிகலா, இ.சியானி,

திருமுறிகண்டி சூ.ஜெனற் ரவீந்திரன், அ.அஜந்தா, மு.கரு வேலங்கண்டல் அ.த.க. பாட சாலை தி.சுபத்திரா, இ.ரஜீந்தினி, இ.ஜெயரூபி, டி.நிறஞ்சினி, மு.கல் விளாங்குளம் அ.த.க பாடசாலை ம.சிவரஜனி, இ.டனிஸ்ரன்சிலேற், இ.யமுனா,

மு.அமைதிபுரம் அ.த.க பாட சாலை. க.மேரிசெல்வராணி, ச.ராஜேஸ்வரி, மு.யோகபுரம் ம.வி மு.சிறிவிலாசினி, இ.தயாளன், க.காண்டீபன், கு.விஜயகௌரி, மு.கோட்டை கட்டியகுளம் அ.த.க .வி நா.நாகேஸ்வரி, ச.மேகலா, ம.கஜேந்திரன், மு.வன்னி விளாங் குளம் அ.த.க.பாடசாலை இ.சுகந் தினி, நா.தர்சினி, கோ.டிலீபன், கூத்தி மூலை த.வி நா.விமலாம் பிகை, பனங்காமம் மூன்று முறிப்பு அ.த.பாடசாலை தி.தியா கினி, அம்பாள்புரம் த.வி க.டெல்சி, பாலிநகர் ம.வி சி.றஞ் சினி, இ.செந்தில்குமரன், ஒதிய மலை அ.த.க பாடசாலை சி.பேரானந்தசிவம், த.மதிவதனன், சு.சத்தியகௌரி, அம்பகாமம் அ.த.க பாடசாலை தி.கந்தசாமி, பெரிய புளியம்குளம் அ.த.க பாட சாலை வி.சசிகரன், க.பத்மவதனி, காதலியார் சம்மணங்குளம் இ.லோகநாயகி, வி.சுகந்தி,

கற்சிலைமடு அ.த.க பாட சாலை இ.சுபாசினி, ஒலுமடு த.வி சி.கருணாமூர்த்தி, ச.சிவலக்ஷிமி, ஒட்டுசுட்டான் ம.வி சி.தனுஷியா, கூழாமுறிப்பு அத.க பாடசாலை அ.மயூரதன், க.அன்ரோனிஜெரட், லோ.பத்மலோஜினி, ஜ.ராஜமதன், செ.சோதீஸ்வரன், க.சிவகுமார், தட்டுவான் அ.த.க பாடசாலை ச.சகிகரன், ப.ஜெயச்செல்வன்,

முத்தையன்கட்டு இடது கரை ப.தமிழ்ச்செல்வி, க.கிருஷ்ண குமாரி, நா.ஜெயமதி, வீ.சந்திர காந்தன், பனிக்கன்குளம் அ.த.க பாடசாலை த.பிரபாகரன், வவுனிக் குளம் மத்தியசுலுசு அ.த.க பாட சாலை இ.இளங்கேஸ்வரி. (24)

# தருமபுரத்தில் வீதி விபத்து; இரண்டு பேர் காயம்

(விசுவமடு)

பரந்தன் முல்லைத்தீவு நெடுஞ் சாலையில் தருமபுரத்தில் கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவு கிராமிய வங்கிக்கருகில் நேற்று உந்துருளியில் வந்தவர் வயோ திபப் பெண் ஒருவரை மோதியதில் இருவரும் காயம் அடைந்துள் ளனர்.

பரந்தன் பகுதியிலிருந்து வேகமாக வந்த உந்துருளி தரும புரம் கிராமிய வங்கி பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வீதியைக் கடக்க முற் பட்ட வயோதிபப் பெண்ணை மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டது. காயமடைந்த இருவரும் தரும புரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விசுவமடு தமிழீழ காவல்துறை யினர் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (46)

# பிரான்ஸ் நாட்டு தூதுக்குழுவினர் வைத்தியசாலைகளுக்கு விஜயம்!

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்த பிரான்ஸ் நாட்டுத் தூதுக் குழுவினர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை, மந்திகை ஆதார வைத்தியசாலை என்பவற்றை நேரில சென்று பார்வையிட்டனர்.

தெல்லிப்பளை மாவட்ட வைத் தியசாலைக்கு விஜயம் செய்த இவ் வைத்தியர் குழுவினர் தற்காலிகமாக இயங்கும் வைத்தியசாலைக்கு விஜயம் செய்ததுடன் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள நிரந்தர வைத்தியசாலையையும் நேரில் சென்று பார்வையிட்டனர்

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள புற்றுநோய் வைத்திய சாலைக்கும் சென்று தற்போது புதிய இயந்திரங்கள் பொருத்தப்படுவதைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (41)


# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் நேர்காணல்

தமிழீழப் போக்குவரவுக்கழகத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்காணல் 02.05.2005 ஆம் நாள் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 2.00 மணி வரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள த.போ.க நடுவப்பணிமனையில் நடைபெறும்.

இப்பணிக்கு வருகை தருபவர்கள் தங்கள் கல்விச் சான்றி தழ் அகவையினை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,<br>
ஆளணி ஆளுகைப்பகுதி,<br>
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,<br>
நடுவப்பணிமனை,<br>
விசுவமடு.

(சி.11829)



ஈராக்கின் அசாமியா என்ற இடத்தில் நடைபெற்ற கார்க் குண்டுத் தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் சின்னாபின்னமாகியிருப்பதை அவதானிக்கும் ஈராக்கியப் படையினரை முதலாவது படத்திலும், அதாமியாவில் நடைபெற்ற தற்கொலைத் குண்டுத் தாக்குதலில் சேதமான மேலும் ஒரு வாகனத்தைக் கடந்து செல்லும் படையினரை இரண்டாவது படத்திலும் காணலாம். இத் தாக்குதலில் 30 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

# வியட்நாம் போர் கொண்டாட்டம் ஆடம்பரம் இன்றி நடத்த ஏற்பாடு

அமெரிக்கா மனம் புண்படும் என்பதால் வியட்நாம் போர் நினைவுக் கொண்டாட்டத்தை அடக்கி வாசிக்க வியட்நாம் முடிவு செய்துள்ளது.

அமெரிக்கா வியட்நாம் இடையே நடந்த போர், 1975ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி காலை 11 மணிக்கு முடிவுக்கு வந்தது. போர் முடிவுக்கு வந்ததைத் ஆண்டுதோறும் வியட்நாம் கொண்டாடி வருகிறது. வாண வேடிக்கை, விழாக்கள் எனக் கோலாகலமாக இந்தக் கொண்டாட்டம் இருக்கும். இந்தாண்டும் அது போன்ற ஏற்பாடுகளைச் செய்து வந்த வியட்நாம் அரசு திடீரென வேறு முடிவுக்கு வந்துள்ளது. விழாவை ஆடம்பரமாகக் கொண்டாடினால், அமெரிக்காவுடன் தற்போது வளர்ந்துள்ள நட்புப் பாதிக்கும் என்று வியட்நாம் அரசு கருதுகிறது. எனவே கடந்தாண்டை விட இந்தாண்டு கொண்டாட்டத்தை அடக்கி வாசிக்க முடிவு செய்துள்ளது.

## யப்பான் ரயில் விபத்து பலியானோர் 104 உயர்வு

(டோக்கியோ)

யப்பானில் திங்கட்கிழமை அதி காலை ஏற்பட்ட மோசமான ரயில் விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 104 ஆக உயர்ந்துள்ளது. 450 பேர் காயமடைந்துள்ளனர்.

யப்பானிலுள்ள அமாகசகியில் விபத்து ஏற்பட்டது. கடந்த 40 ஆண்டுகளில் நிகழ்ந்த ரயில் விபத்துக்களிலே இந்த விபத்தில் தான் அதிக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. 57 ஆண்களும், 47 பெண்களும் இவ்விபத்தில் பலியாகியுள்ளனர்.

நொருங்கிய ரயில் பெட்டிகளில் இருந்து சிதைந்த நிலையிலுள்ள சடலங்களை மீட்புக் குழுவினர் மீட்டு வருகிறார்கள். வியாழக்கிழமை எடுக்கப்பட்ட சடலத்தில் ஓட்டுநர் அணியும் ஆடை காணப்பட்டதால் அவர் ரயில் ஓட்டுநர் ரைஜிரோ தகாமிஆக (வயது:- 23) இருக்கலாம். என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இளம் ஓட்டுநர் தகாமி வேகமாக ரயிலை ஓட்டிச் சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று அந்நாட்டின் புலனாய்வு மையம் அவர் மீது நடவடிக்கை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பறவை, விமானத்தைப் பிரித்தறிய முடியாத அவலம் அச்சத்தில் பாதாள அறையில் புகுந்த சனாதிபதி புஷ்

(வோஷிங்டன்)

**அமெரிக்க சனாதிபதி மாளிகைப் பகுதிக்குள் மர்ம விமானம் ஊடுருவியதாக எழுந்த வதந்தியைத் தொடர்ந்து சனாதிபதி புஷ் பாதாள சுரங்க அறைக்குள் புகுந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.**



2001ஆம் ஆண்டுசெப்ரெம்பர் 11ஆம் திகதி தீவிரவாதிகள் விமானத்தைக் கடத்தி நியூயோர்க் 111 மாடிக் கட்டடத்தின் மீது மோதித் தகர்த்தனர். அதைத் தொடர்ந்து வோஷிங்டன் வெள்ளை மாளிகை இருக்கும் பகுதி மீது விமானம் பறக்கத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் தடை செய்யப்பட்ட பகுதியில் மர்ம விமானம் ஊடுருவி இருப்பதாகவும், அது வெள்ளை மாளிகையைத் தாக்கலாம் என்றும் வெள்ளை மாளிகை பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து புஷ் அவசர அவசரமாகச் சுரங்க அறைக்கு அழைத்துச் சென்று தங்க வைக்கப்பட்டார். இவருடன் துணை சனாதிபதி டிக் செனி யும் பாதாள அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அபாயம் ஏதும் ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்கு முன் எச்சரிக்கை நட வடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

உலங்குவானூர்திகள் வரவழைக்கப்பட்டன. மர்ம விமானம் ஏதும் ஊடுருவி இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்குமாறு அனுப்பபட்டன. அதன் பின் விமானத் தாக்குதல் பற்றிக் கிடைத்த செய்தி வெறும் வதந்தி தான் என்பது தெரிய வந்தது. தடை செய்யப்பட்ட பகுதிக்குள் கூட்டமாகப் பறவைகள் பறந்ததாகவும் அது ராடர் திரையில் தவறான எச்சரிக்கையை கொடுத்து விட்டது. இதை வைத்து விமானம்தான் ஊடுருவி விட்டது என்ற தவறான முடிவுக்கு அதிகாரிகள் வந்து விட்டனர் என்பது தெரியவந்தது.

## அமெரிக்க அதிகாரிக்கு மரண தண்டனை

இரண்டு அதிகாரிகளைக் குன்று வீசிக் கொன்றமை மற்றும, இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்க விமானபடையைச் சேர்ந்த அதி காரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் விமானப் படைப் பிரிவைச் சேர்ந்த ஹசன், அக்பர், ஈராக் போரின்போது அமெரிக்கப்படை குவைத்தில் முகாமிட்டு இருந்த வேளை அங்குள்ள விமானப் படையின் ஒரு பிரிவுக்குத் தலைமை தாங்கினார். அப்போது அவருக்கும், அவருக்குக் கீழ உள்ள இரண்டு அதிகாரிகளுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

இதில் ஹசன் அக்பர் வெடிகுண்டு வீசித் தனது கீழ் அதிகாரிகள் இரண்டு பேரைக் கொலை செய்ததுடன் வேறு சில இராணுவ வீரர்கள் மீது துப்பாக்கித் தாக்குதல் நடத்தினார். இதனை அடுத்துக் கைது செய்யப்பட்ட அதிகாரிக்கு எதிரான வழக்குத் தொடரப்பட்டது. இவர் குற்றவாளி என்று கடந்த வாரம் இராணுவ நீதிமன்று தீர்ப்பளித்து அவருக்கு மரண தண்டனை விதிக்க இராணுவ நீதிமன்று உத்தரவிட்டுள் ளது.

# தீவிரவாதிகளுக்கு சர்வதேச அளவில் ஆயுத விநியோகம் 30 நிறுவனங்களின் சொத்துகளை முடக்கியது அமெரிக்கா

(வோஷிங்டன்)


தீவிரவாதிகளுக்குச் சர்வதேச அளவில் ஆயுத விநியோகம் செய்யும் நிறுவனத்துடன் தொடர்பும் கொண்டிருந்த 30 அமெரிக்க நிறுவனங்களின் சொத்துக்களை அந்நாட்டு அரசு முடக்கி வைக்க உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்கர்கள் [illegible]ர்வரும் இந்த 30 நிறுவனங்களுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்றும் அந்த உத்தரவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகளுக்கு சர்வதேச அளவில் மறைமுகமாக ஆயுதங்களை விநியோகம் செய்யும் 'பவுட்' நிறுவனம் சரக்கு விமான சேவையையும் உலகம் முழுவதும் நடத்தி வருகிறது. அது மட்டுமன்றி அமெரிக்கா, அங்கோலா, கொங்கோ ருவாண்டா மற்றும் சூடான் ஆகிய நாடுகளில் தீவிரவாதிகளுக்கான முகாம்களை அமைத்து செயற்படுகின்றது. ஆப்கானிஸ்தான் நாட்டின் தலிபான் படையினருக்குத் தேவையான ஆயுதங்களைப் பெருமளவில் விநியோகம் செய்வது பவுட் நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.



பூகம்பம், சுனாமி எனத் தொடர்ந்து இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டு வரும் இந்தோனேசியாவில் தற்போது மீண்டும் ஒரு சோகம் குக்கேன் கிராமத்தில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட வீடுகளில் எஞ்சிய பொருட்களைச் சேகரிக்கும் மக்கள்

# டிஸ்கவரி விண்கலத்தின் பயணம் ஒத்திவைப்பு



அமெரிக்காவின் கொலம்பியா விண்கலம் விண்வெளிக்கு சென்று கடந்த 2003ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பூமிக்குத் திரும்பிய போது விபத்துக்குள்ளாகி கல்பனா சவ்லா உட்பட ஏழு பேர் பலியாகினர். இந்த விபத்துக்குப்பின் 'நாசா' நிறுவனம் டிஸ்கவரி விண்கலத்தை மேமாதம் 22ஆம் திகதி பறக்கவிட திட்டமிட்டு இருந்தது. கென் னடி விமானத் தளத்திற்கு அந்த விண்கலம் கொண்டு வரப்பட்டு தயார் நிலையிலும் வைக்கப்பட்டது.

இந்த நிலையில் விண்கலத்தின் எரிபொருள் தாங்கியில் பனிக்கட்டிகள் உருவாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அடிக்கடி இது ஏற்படுகிறது. விண்கலம் பறக்கும்போது இந்தப் பனிக்கட்டிகள் எரிபொருள் தாங்கியை சேதப்படுத்தும் என்பதால் விண்கலம் செலுத்துவதை மேலும் சில வாரங்களுக்குத் தள்ளி வைக்க நாசா விஞ்ஞானிகள் முடிவு செய்திருக்கிறார்கள். ஜுலை மாதம் 13 ஆம் திகதிக்குப் பிறகு இது பறக்க விடப்படும என்று தெரிவிக்கப்படுகின்றது. .

## பலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வுகாண மொஸ்கோவில் அமைதி மாநாடு—புட்டின்

பலஸ்தீன பிரச்சினைக்குத் தீவு காண்பதற்கு மொஸ்கோவில் அமைதி மாநாடு நடத்தத் திட்டமிட்டிருப்பதாக ரஷ்ய சனாதிபதி சனாதிபதி புட்டின் அறிவித்துள்ளார்.

எகிப்து சென்றிருக்கும் புட்டின் அந்த நாட்டு அதிபர் ஹோஸ்னி முபாரக் உடன் நிருபர்களுக்கு பேட்டி அளித்த போதே இந்தத் திட்டம் பற்றித் தெரிவித்துள்ளார். "ஐ.நா தீர்மானத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடைபெறும்" என்றும் புட்டின் கூறினார். இதற்கு அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

# அமெரிக்காவில் அதிசயம்; வாடகைத் தாய்க்கு ஐந்து ஆண் குழந்தைகள் பிரசவம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வாடகை தாய்க்கு ஒரே பிரசவத்தில் ஐந்து ஆண்குழந்தை பிறந்த அதிசயம் நடந்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள அரிசோனா மாகாணம் போயினிக்ஸ் நகரைச் சேர்ந்த லூயிசா - என்ரிக் தம்பதிகளுக்கு நீண்ட காலமாகக் குழந்தை இல்லை. அவர்களைப் பரிசோதித்த டாக்டர்கள் அவர்களுக்கு குழந்தை பிறக்க வாய்ப்பு இல்லை என்று கூறி விட்டனர். அதனால் மனம் கலங்காத தம்பதிகள்,டாக்டர்களின் ஆலோசனைப்படி குழந்தை பெற்றுக்கொடுக்க ஒரு வாடகைத் தாயைத் தேடிப் பிடித்தனர். அந்த வாடகைப் பெண்ணே இந்த ஐந்து ஆண் குழந்தைகளையும் பெற்றெடுத்துள்ளார். லூயிசா என்ரிக் தம்பதிகள் ஐந்து கருவை வாடகைத் தாய் கற்பப்பையில் வைத்தனர். அதில் ஒன்று இரண்டு குழந்தைகளாக வளரும் என்று டாக்டர்கள் கருதினர். ஆனால் ஐந்து கருவும் குழந்தைகளாக வளர்ந்துவிட்டன. அந்தக் குழந்தைகளை டாக்டர்கள் அறுவை சிகிச்சையின் மூலம் வெளியே எடுத்தனர். 10 டாக்டர்களும், 15தாதியர்களும் பிரசவம் பார்த்தனர். ஒன்பது நிமிடத்தில் எடுக்கப்பட்ட ஐந்து குழந்தைகளும் போதிய எடையுடன் நலமாக இருப்பதாகவும் அந்தக் குழந்தைகளுக்கு என்ரிக், ஜார்ஜ், கேபிரியல், ஜோவியர், விக்டர் என்று பெயரிட்டுள்ளனர். அதில் குழந்தை ஜேரியருக்கு இருதயக் கோளாறு உள்ளது. அதற்கு நுட்பமான அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்று டாக்டர்கள் கூறியுள்ளனர்.

குழந்தை பெற்றுக்கொடுக்க வாடகைத் தாய்க்கு ஏறத்தாழ ரூ.6லட்சத்து 45 ஆயிரம் (15 ஆயிரம் டாலர்) கட்டணம் பேசியிருந்தனர். ஆனால் அந்தக் "கட்டணம் வேண்டாம்" என்று கூறிய வாடகைத் தாய் பெரசா அண்டர்சன் ஐந்து குழந்தைகளை ஒன்றாகப் பார்ப்பதும் அவைகளின் அழுகுரல் களைக் கேட்பது அதிசயமான ஆசீர்வாதம். அந்த ஐந்து குழந்தைகளையும் வளர்க்க அதிக பணம் தேவைப்படும் என்றார். அவருக்கு குழந்தைகளின் வருங்காலப் பெற்றோர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# ஆனையிறவுப் படைத்தளம் வீழ்ச்சி கண்ட பின்னரே

# அரசியல் மாற்றங்கள் பல நிகழ்ந்தேறின

**-தமிழீழ அரசியல்துறை மகளீர் பொறுப்பாளர் தமிழினி**



**தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆனையிறவு சிறிலங்கா படைத்தளம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சி கண்ட பின்னரே அரசியல் மாற்றங்கள் பல நிகழ்ந்தேறின என தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் முற்பகல் 10.00 மணியளவில் ஆனையிறவில் நடைபெற்ற ஆனையிறவு மீட்பு, தீச்சுவாலை முறியடிப்பு ஆகியவற்றின் வெற்றிவிழாவின் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது; ஆனையிறவு ஒரு இடத்தின் பெயர் ஆனால் ஒரு வரலாற்றின் பெயராக மாறியுள்ளது. ஆனையிறவு ஒரு கால அளவையாகும். வறண்ட உப்புக்கரிக்கின்ற எந்தப் பெரும் மரங்களும் இல்லாத வெறும் நிலம். ஆனால் இந்த சாதாரண நிலத்தின் அடியில் 3,000 உயிர்கள் கலந்திருக்கின்றன. 3,000 தாய்மார்களின் கண்ணீர் கலந்திருக்கின்றன. தமிழ்த் தேசிய இனத்தின் வீரவரலாற்று சாட்சியாக இந்த ஆனையிறவு நிலம் இன்று உலகின் கண்களுக்கு முன்னால் எழுந்து நிற்கிறது. ஒரு பெரும் தமிழ்த் தலைவனின் வீரத்திற்கு, போரியல் மதிநுட்பத்திற்கு போரியல் சாணக்கியத்திற்கு சாட்சியாக இந்த ஆனையிறவு நிலம் நிமிர்ந்து நிற்கிறது. இவ்வளவு பெருமைகளைக் கொண்ட ஆனையிறவுத் தளத்தினை நாம் மீட்டெடுத்து வெற்றி விழாவினை கொண்டாடிக்கொண்டிருக்கின்றோம். உலகத்தில் வாழும் தமிழர்க்கெல்லாம் ஆனையிறவு எங்களுக்கு சொந்தமென நெஞ்சை நிமிர்த்தும் நாளாக இன்றைய இவ் வெற்றி விழா நாள் அமைந்துள்ளது என தமிழினி மேலும் தெரிவித்தார். அரங்க நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் நடைபெற்றன. கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை, போர்ப் பயிற்சி கல்லூரியைச் சேர்ந்த செஞ்சினா, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார். இவ் விழாவில் போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவில் கலந்து கொண்டதுடன் ஆனையிறவு தமிழீழ விடுதலைப்புலிகளினால் மீட்டெடுக்கப்பட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் குளிர்பானங்கள், இனிப்புக்கள் ஆகியவற்றை பரிமாறிக்கொண்டனர்.



கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வரும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள நடமாடும் சேவையில் கலந்துகொள்ளும் பொருட்டு கிளிநொச்சிக்கு வருகை தந்துள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையர், உதவி ஆணையர் மற்றும் அதிகாரிகள் கிளி .அரச அதிபருடன் உள்ளதனைப் படத்தில் காணலாம்.

(படம்.சோதி)

## முத்து ஐயன்கட்டு பேருந்து போக்குவரவில் பயணிகள் தொடர்ந்து அசௌகரியம்

முத்து ஐயன் கட்டுக்கும், புதுக்குடியிருப்பிற்குமிடையேயான போக்குவரவில் ஈடுபட்டு வரும் பேருந்து நெடுநாளாக பழுதடைந்த நிலையில் சேவையில் ஈடுபட்டு வருவதால் பயணிகள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதிக பயணிகள் பிரயாணம் செய்யும் மேற்படி போக்குவரவில் சிறிய மிகவும் பழுதடைந்த பேருந்து ஒன்றே பாவனைக்கு விடப்பட்டிருக்கிறது. நாள் ஒன்றுக்கு இரு தடவைகள் மாத்திரமே சென்று வரும் இப்பேருந்து அதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் கர்ப்பிணிகள், நோயாளிகள் போன்றோர் அதிக சிரமத்துடனேயே பயணம் செய்ய வேண்டிய பரிதாப நிலை காணப்படுகிறது.

இவ்வாறு பயணம் செய்யும் பேருந்து பல தடவைகள் இடையில் நின்று விடுகிறது. இதனால் குறித்த நேரத்தில் செல்லவேண்டிய அரச உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்கள் போன்ற பயணிகள் வேலை நேரத்தில் வீதியில் நின்று அங்கலாய்க்கக் கூடிய பரிதாப நிலை தொடர்வதாக அரச உத்தியோகத்தர் ஒருவர் எம்மிடம் தெரிவித்தார். (து)

## சிங்களக் குடும்பங்களுக்கு த.பு.க கூடாரங்கள் வழங்கியது

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்லாறு கிராமத்தில் வசிக்கும் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட 66 சிங்களக் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு கூடாரம் வீதம் 66 கூடாரங்களைத் திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஜி.ரி சற்ட் அனுசரணையுடன் வழங்கியுள்ளது. கூடாரங்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. கடற்கோளினால் பாதிக்கப்பட்டுள்ள தங்களுக்கு இக் கூடாரங்கள் போதுமான உறைவிட வசதிகளை வழங்குவது குறித்து நிம்மதியடைவதாக சிங்களக் குடும்பங்கள் நிகழ்வில் பங்கு பற்றிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தன. (25)

## சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு ஒரு நாள் செயலமர்வு

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் மத்தியில் சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஒரு நாள் செயலமர்வொன்றை கிழக்குப் புனர்வாழ்வுக் கழகம், யு. என்எச்சி. ஆர், சட்ட உதவ் செயற்திட்டம் ஆகியன இணைந்து இன்று சனிக்கிழமை திருமலைப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடத்தவிருக்கிறது. பிரதம அதிதியாக திருகோணமலை நீதவான் எம்.கணேசராஜா பங்கு பற்றுகின்றார். அதிதிகளாகப் பிரதேச செயலாளர் சுந்தரம், அருமைநாயகம், யு.என்.எச்.சி ஆர், திருகோணமலைப் பிரதிநிதி பிரிட்டா ஹெலலன், மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் கமகே ஆகியோரும் பங்கு பற்றுகின்றனர். (25)

## சல்லிக் கிராமத்தில் படகுகள் திருத்தும் நிலையம் திறப்பு

(திருமலை)

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஏ.ஜே.கடற்றொழில் துறையினரின் நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்டம்- சல்லிக்கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடிப்படகுகள் திருத்தும் நிலையம் நேற்று முன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் மங்கல விளக்கை ஏற்ற, விடுதலைப்புலிகள் திருகோணமலை நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவகுமார் நாடாவை வெட்டி நிலையத்தைத் திறந்து வைத்தார். திருகோணமலை பட்டினமும், சூழலும பிரதேச கடற்றொழிலாளா கூட்டுறவுச்சங்கங்களின் சமாசமும் இந்நிலையத்தை நடத்துகின்றது.

சமாசத் தலைவர் எஸ்.பவளராசா இந்நிழ்வுக்குத் தலைமை வகித்தார். பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் சிறப்புரையாற்றுகையில்;கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மீனவ சமூகம் கையறுந்த நிலையில் தத்தளிக்கின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவெளிநாடுகள் பல முன்வந்துள்ள போதும் அவற்றை வடக்குக்கிழக்கிற்குப் பயனளிக்கும் விதத்தில் செலவிட அரசு தயக்கம் காட்டுகின்றது. முன்பு யுத்தத்தினாலும், இப்போது கடற்கோளினாலும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குமக்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் சர்வதேச சமூகத்தில் வலுப்பெற்று வருகின்றது. அரசாங்கம் இன்னும் புறக்கணிப்பு நடவடிக்கையைத் தான் மேற்கொள்கின்றது. பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கி வடக்குக்கிழக்கிற்கு உதவ சர்வதேச சமூகம் விரும்புகின்றது. தமிழ் மக்களும், போராளிகளும் அது நிறைவேறும் காலத்தை எதிர்பார்க்கின்றார்கள். சிங்கள மக்களில் பெரும்பாலானோர் தமிழ், முஸ்லிம் மக்களுடன் நல்லுறவை வளர்க்கவே விரும்புகின்றனர். கடற்கோளினால் நாட்டின் தெறகுப்பகுதி தான் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுவதில் கொழும்பு அரசு முன்நிற்கின்றது. வடக்குக் கிழக்கு தான் மோசமாகக் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதியாகும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ் வில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் திருமலை நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவகுமார். பேசுகையில்; "கடற்கோளினால் பாதிக்கப்பட்ட எமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் தன்னார்வ அமைப்புக்கள் தற்காலிக கொட்டில்களை அமைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் பணி, சிமெந்து, மணல் மற்றும் கட்டுமாணப் பொருட்களை எடுத்துச் செல்வதற்குப் படையினர் தடைவிதித்துள்ள காரணத்தினால் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட் டுள்ளது. இது போர் நிறுத்த மீறல் மாத்திரமல்ல மனித வுரிமை மீறலாகும்" என்றார்.

இந்நிகழ்வில் புனர்வாழ்வுத்திட்ட ஒருங்கிணைப்பாளர் கே.தர்மசீலன், திருமலை மாவட்ட கூட்டுறவுக் கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர், சமாசத்தலைவர் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள்.

## சிறியதந்தை தாக்கி சிறுவன் பலி

சிறிய தகப்பனால் தாக்கப்பட்ட 12 வயதுச் சிறுவன் கொழும்பில் மரணமானான்.

வவுனியா கற்பகபுரம் பகுதியில் கடந்த 20ஆம் திகதி சிறிய தகப்பனால் தாக்கப்பட்டு பலத்த காயங்களுடன் மேசிலின் மனோகரன் என்ற சிறுவன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அங்கு இறந்திருப்பதாக வைத்தியசாலைக்குத் தகவல் அனுப்பப்பட்டுள்ளது. சிறியதகப்பனால் மேற்படி சிறுவனின் சகோதரியும் தாக்கப்பட்டுள்ளார். அவரும் காயமடைந் திருப்பதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். சிறியதகப்பன் தற்போது பொலிசாரால் கைது செய் யப்பட்டுள்ளார். (21)

## பல்நோக்கு மண்டபம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது

வடக்குக்கிழக்கு சமுதாய மீளளிப்புத் திட்டத்தின் (நிகொட்) கீழ் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் இறால்குழி கிராமத்தில் பல்நோக்கு மண்டபம் ஒன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கையைத் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுள்ளது. மண்டபம் நிர்மாணிப்பதற்கான அத்திவாரக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. கிராமமக்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகளும் நிகழ்வில் பங்கு பற்றினர். இதே வேளை இறால்குழி மக்களுக்குச் சமூக வலுவூட்டல் ஏப்ரல் 23,24 ஆம் திகதிகளில் நிகொட் சமுதாய அபிவிருத்தித்திட்டத்தின் முதலாம் கட்டமாக நடத்தப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடாத்திய இப்பயிற்சிப்பட்டறைகளில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பயனாளிகள் பங்கு பற்றினர். (25)

## பெருவிளையாட்டுப் போட்டி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப்போட்டி எதிர்வரும் மே மாதம் 2,3,4ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதென கோட்டக்கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது. (05)

## தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையில் கிராமங்களைப் புனரமைக்க ஆரம்ப ஆய்வு

(மட்டக்களப்பு)

வடக்கு, கிழக்கு பகுதியிலுள்ள கிராமங்களைப் புனரமைப்பதற்காக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான புள்ளி விபரங்களை மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இச்செயற்பாடானது வடக்கு, கிழக்கு கரையோர அபிவிருத்தித் திட்ட **(NECCDEP)** நிறுவனத்துடன் இணைந்த செயற்பாடாகவே அந்நிறுவன இணைப்பாளர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முனைக்காடு மேறகு, முனைக்காடு வடக்கு, முனைக்காடு தெற்கு, மகிழடித்தீவு தெற்கு, கடுக்காமுனை ஆகிய கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் ஆரம்பநிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முனைக்காடு மேற்குக் கிராமத்திலுள்ள கிராம சேவகர் பிரிவில் இடம்பெற்றது. இவ் ஒன்றுகூடலில் உதவித்திட்டமிடல் உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் முனைக்காட்டு கிராமத்திலுள்ள அனைத்து அபிவிருத்திச் சங்கங்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர் களும், சமூக ஆர்வலர்களும், பொதுமக்களுமாக இருநூறிற்கும் மேற்பட் டோர் கலந்துகொண்டனர். அக்கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குறைபாடுகள் என்பன ஆராயப்பட்டதோடு இக்கிராமத்தின் அபிவிருத்தி வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற முடிவுடன் இந்த ஒன்றுகூடல் நிகழ்வு இனிது நிறைவுபெற்றது.

# வளம், வல்லமையுடைய எமது மக்கள் திட்டமிட்டு அரசினால் ஒடுக்கப்பட்டுள்ளனர்

-யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி

(நல்லூர்)

**சகல வளங்களையும், வல்லமைகளையும் கொண்டிருக்கும் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற மக்கள் அரசியல் ரீதியாகவும், வாழ்வியல், பொருளாதார, தொழில் ரீதியாகவும் தொடர்ச்சியாக சிங்களப் பௌத்த பேரினவாத அரசினால் திட்டமிட்ட முறையில் ஒடுக்கப்பட்டேவந்துள்ளார்கள் என யாழ். மாவட்ட அரசியல துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.**

மேதினம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வளர்ச்சி அடைந்த, வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் தொழிலாளர்களின் நலன்கள் உரிமைகளை ஏற்றத் தாழ்வற்ற சமத்துவ நிலையிலேயே பேணி வருகின்றன. அவர்களுடைய உரிமைகள் மதிக்கப்படுகின்றன. அதனால் அம்மக்களுடைய வாழ்வு மேம்பாடும் முன்னேற்றமும் கண்டு வருகின்றது.

மானிடமேன்மைச் சிந்தனையாளர்களின் சிந்தனைக்கு உலகத் தொழிலாளர்கள் செயல் வடிவம் கொடுத்து இரத்தம் சிந்தி தங்கள் உரிமையை வென்றெடுத்த நாளான மே நாள் மனித சமூகத்தினுடைய நினைவுகளில் மிக முக்கியமான நாள் ஆகும்.

பாதிப்பின் கொடூரங்களைப் பொறுக்க முடியாத அம்மக்கள் தார்மீக ரீதியாக தங்களுடைய உறுதியான மக்கள் போராட்ட முனைப்புகளால் முன்னேற்றங்களைப் பெற்று சர்வதேச அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டு இருக்கின்றனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத் தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் இழுத்தடிப்புக்களாலும், உடனடி மனிதாபிமான துயர்துடைப்பு புனர்வாழ்வுப்பணிகளில் புறக்கணிக்கப்பட்டு வருவதனாலும் மற்றும் எந்தவித உதவிகளும் வழங்கப்படாது புறக்கணிக்கப்படுவதனாலும் நெருக்கடிகளின் மத்தியில் மக்கள் தங்களின் ஜீவனோபாய வாழ்வை நம்பிக்கையுடன் நடத்திக்கொண்டு வருகின்றார்கள்.

யாழ் மாவட்டத்தில் உயர்பாது காப்பு வலயத்தினால் 40 பாரிய தொழிற்சாலைகள் இயங்காமல் இருப்பதோடு அங்கு பணி புரிந்த தொழிலாளர்களுடைய நலன்கள் எவையும் பேணப்படாமையால் அவர்கள் சார்ந்த குடும்பங்கள் மிகமோசமான நிலையிலேயே வாழ்ந்து வருகின்றன.

இதேபோல கடற்றொழிலாளர்களுக்கான சுதந்திரமான சூழல்கள் மறுக்கப்பட்ட நிலையில் நவீன மின்பிடி தொழில் நுட்பங்கள் கடல் தொழிலுக்கான வளங்கள் சேதமாக்கப்பட்டதாலும் அதற்குப் பதிலீடாக இழப்பீடுகள் வழங்கப்படாமையாலும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையினாலும் அவர்களுடைய வாழ்வாதார மேம்பாடு பின்தங்கியே செல்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (41)

# மேதின ஏற்பாடுகள் குடாநாட்டில் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மே தினத்தினை சிறப்புற நடவத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக யாழ மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

அனைத்துலக தொழிலாளர் நாளாகிய மே முதலாம் நாள் இவ்வாண்டில் தமிழ்த்தேசிய இனத்தின் உணர்வு பூர்வமான எழுச்சியை வெளிக்கொணரும் நாளாக யாழ்.குடாநாட்டில் நடத்தப்படவுள்ளது. மே நாள் நிகழ்வுகளாக பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மே நாள் நிகழ்வுகளில் மக்கள் பங்குபற்றுவதற்கான இலவசப் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மே நாள் எழுச்சிப் பேரணி நல்லூர் முருகன் ஆலய முன்றலில் இருந்து பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகும். தீவகக்கோட்டத்தில் இருந்து வரும் மக்கள் கோவில் வீதி வடபுறத்தில் இருந்தும், வடமராட்சிக் கோட்ட மக்கள் பருத்தித்துறை வீதி தெற்கு செட்டிவீதியில் இருந்தும், தென்மராட்சிக் வீதியில் கோட்ட மக்கள் முத்திரைச் சந்தியில் இருந்தும், யாழ். நல்லூர் கோட்ட மக்கள் வைமன் வீதியில் இருந்தும், காரைநகர் பிரதேச மக்கள் வீரமா காளி அம்மன் ஆலய முன்றலில் இருந்தும், சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச மக்கள் தியாகி திலீபன் தூபி முன்றலில் இருந்தும், உடுவில், தெல்லிப்பளை, அச்சுவேலி, கோப்பாய்ப் பிரதேச மக்கள் கோவில் தெற்குப்புறம் தரித்து நின்றும் பேரணியில் கலந்து கொள்வர் அரசடிச் சந்தி வீதியூடாக கந்தர் மடச்சந்தி பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தியூடாக ஆடிய பாதம் வீதி யூடாகச் சென்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தைச் சென்றடைந்து பொதுக்கூட்டம் நடைபெறும்.

இவ்வாண்டு மே தினப்பேரணியை வெகு சிறப்பாக முன்னெடுக்க விரிவான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. எனவே குறிப்பிட்ட நேரத்திற்கு பேரணி ஆரம்பமாகவிருப்பதால், கலந்து கொள்ளும் பொதுஅமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் அனைவரும் காலதாமதமின்றி வருகை தருவதுடன் தங்களால் எடுத்து வரப்படும் ஊர்திகளை முன்கட்டிக் கொண்டு வந்து சேர்க்குமாறு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

# தொழிலாளர் தினத்தில் அணிதிரளுமாறு தேசிய எழுச்சிப்பேரவை அறை கூவல்

(கோப்பாய்)

எமது தேசம் விடுதலைபெறவும், இடைக்கால நிர்வாக அதிகாரசபையை விடுதலைப் புலிகளிடம் வழங்க வற்புறுத்தியும், இடைக்கால ஏற்பாடாக சுனாமி அனர்த்த இழப்பில் இருந்து எமது மக்களை மீட்டெடுக்கவும், பொதுக்கட்டமைப்பில் விடுதலைப்புலிகளை இணைக்கவும் வலியுறுத்தி வரும் மே தினத்தில் கோப்பாய் பிரதேச அனைத்துத் தொழிலாளர்கள், மகளிர் மற்றும் பொது மக்கள் எழுச்சியுடன் அணிதிரளுமாறு கோப்பாய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் கேட்டுள்ளனர்.

தாயகம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டம் சமாதான சூழ்நிலையில் தன்னாட்சி அதிகார அலகாகப் பரிணமித்து நிற்கின்றது.

சிங்கள தேசம் ஒரு துரும்பைத் தானும் தமிழருக்கு வழங்க ஆயத்தமில்லாத நிலையில் புலிகளின் பொறுமையை அவர்களின் பலவீனமாகக் கருதிய சிங்கள பௌத்த பேரினவாதிகள், துரோகிகளின் ஒத்துழைப்புடன் எமது போராளிகளைக். கொன்று குவிக்கின்றனர்.

சுனாமி பேரிடர் எம்மை மேலும் துன்பத்திலாழ்த்தியுள்ளது. எமது தாயகப் பிரதேசமாக வடக்குக் கிழக்கு மாகாணத்தைக் கட்டி எழுபவும் சுனாமி இடர்பாடுகளில் இருந்து எமது மக்களை மீட்கவும் பொதுக் கட்டமைப்பை நாம் வேண்டி நின்ற போதிலும் சிங்கள பௌத்த பேரினவாதம் அதைக் கூட வழங்க ஆயத்தமில்லாத நிலையில் உள்ளது என கோப்பாய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை தெரிவித்துள்ளது.

இதேவேளை தொழிற்சங்கங்கள், பொதுஅமைப்புக்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்கள் மற்றும் மாணவர் அமைப்புக்கள் எனப் பல்வேறு அமைப்புக்களும் தமக்கு எதிராக அரசு மேற்கொண்டு வரும் அடக்குமுறைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் ஊர்திகளையும் மே தின ஊர்வலத்தில் எடுத்துவரவுள்ளனர். (41)

# சமூக பொருளாதார நிறுவனத்தால் இன்று உதவிகள் வழங்கல்

(நல்லூர்)


சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் இன்று காலை 11.00 மணிக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கற்கோவளம் புனிதநகர் பழைய குடியேற்றத்திட்டத்தில் உள்ள 35 குடும்பங்களுக்குக் கிணறுகள் கட்டுதற்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

சுவிஸ் நாட்டில் வாழும் அன்பர் ஒருவரின் உதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து சென்ற போது இப்பகுதியில் உள்ள கிணறுகள் யாவும் அழிக்கப்பட்டுள்ளன.

அழிக்கப்பட்ட கிணறுகளை மீளப் புனரமைப்பதற்கு வசதியாகக் கிணறு கட்டுவதற்கு தேவையான பொருட்களுடன் நிதியாக நாலாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (41)

# சிறுவர்களுக்கு விற்றமின் 'ஏ' இன்று வழங்கப்படுகின்றது



(நமது நிருபர்)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள ஆறுமாதம் தொடக்கம் ஐந்து வயது வரையிலான அனைத்து சிறுவர்களுக்கும் விற்றமின் 'ஏ' உயிர்ச்சத்து இன்று வழங்கப்படுகின்றது.

காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை தற்காலிக முகாம் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இடங்கள் என்பவற்றில் வைத்து வழங்கப்படுகின்றது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகமும், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமும் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளன. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

**உங்கள் பிள்ளைக்கு ஏன் விற்றமின் ஏ உயிர்ச்சத்து தேவை?**

*.ஆரோக்கியமான வளர்ச்சிக்காக.

*. உடலில் உண்டாகும் எதிர்ப்பு சக்தியளித்தலை அதிகரித்து அதன் மூலம் வயிற்றோட்டம், மார்பு சம்பந்தான இருமல், தடிமல் மற்றும் நுரையீரல் அழற்சி போன்றவற்றை வராமற் தடுப்பதற்காக.

*. தெளிவான பார்வைக்காக.

**விற்றமின் ஏ உயிர்ச்சத்துக் குறைபாடு எப்படி குழந்தைகளைப் பாதிக்கும்?**

*. பார்வைக் குறைபாடு ஏற்பட்டு குருட்டுத் தன்மை ஏற்படலாம்.

*. வளர்ச்சிக் குறைபாட்டால் மந்த போசனை ஏற்படலாம்.

* வயிற்றோட்டம் மற்றும் மார்புச்சளி சம்பந்தமான நோய்கள் அதிகளவில் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் பிள்ளைக்கு விற்றமின் ஏ உயிர்ச்சத்து பெரும் அளவு பெறுவதை இன்று உறுதிப்படுத்துங்கள்.

**எதற்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விசேட விநியோக நிகழ்ச்சி.**

*. போசாக்கான உணவு கிடைப்பதிலும் விற்றமின் ஏ அதிகமுள்ள உணவு கிடைத்தலிலும் பாதிக்கப்பட்டமை.

*.நோய்வாய்ப்பட அதிக வாய்ப்பு.

*. குறைவான நோய் எதிர்ப்புத் தன்மை.

**நீங்கள் கொண்டு வரவேண்டிய பதிவேடுகள்**

குழந்தையின் சுகாதார வளர்ச்சிப் பதிவேடு.

விற்றமின் ஏ பெரும் அளவு கொடுக்கப்பட்டதை எழுதி உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

சுனாமி அனர்த்தத்தின்போது குழந்தையின் சுகாதார வளர்ச்சிப் பதிவேடு தொலைந்திருந்தால் இத்தினத்தில் புதிய ஓர் அட்டையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் பகுதி சுகாதார மருத்துவமாதை சந்தியுங்கள்.

**விற்றமின் ஏ உயிர்ச்சத்து**

மஞ்சள் நிற, பச்சை நிற கனிகளும், மரக்கறிகளும். மீன், இறைச்சி, ஈரல் மற்றும் முட்டையின் மஞ்சட்கரு என்பவற்றிலுள்ளது.

**விற்றமின் ஏ குறைபாட்டை எப்படித் தடுக்கலாம்?**

*. குழந்தை பிறந்த முதல் ஆறு மாதங்கள் வரை தாய்ப்பாலை மட்டும வழங்குங்கள்.

*. ஆறு மாதம் தொடக்கம் மேலதிக உணவுடன் விற்றமின் ஏ அதிகளவுள்ள உணவுகளைக் கொடுக்கவும்.

*. குழந்தைக்கு ஒன்பது மாதமாக இருக்கும்போது வழங்கப்படும் சின்னமுத்து ஊசியின் போதும் ஒன்றரை வருடங்களாக இருக்கும் போது வழங்கப்படும் போலியோ சொட்டு மற்றும் முக்கூட்டு ஊசியின் போதும் விற்றமின் ஏ மேலதிக பெரும் அளவு கொடுக்க நடவடிக்கை எடுக்கவும். (19)

# இத்தாலி




இத்தாலியக் குடியரசு தென் மத்திய ஐரோப்பாவில் அமைந்துள்ள புராதன நாடாகும். உலகில் புகழ்பெற்ற உரோம சாம்பராச்சியத்தின் தலை நகரகாக விளங்கிய ரோம் நகரமே அதன் தலை நகரமாகும். அது இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த நகரமாகும். உரோமராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னர் அது பல ராச்சியங்களாகப் பிரிந்தது. இறுதியில் 1870 ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட நாடாகவும் இத்தாலி என்னும் பலமிக்க ஒரு ஐரோப்பிய நாடாகவும் திகழ்கின்றது.

அதன் புவியியல் பின்னணியை நோக்கினால் மேற்கில் பிரான்ஸ், வடக்கில் சுவிஸ்லாந்து, ஆஸ்திரியா கிழக்கில் ஸ்லோவேணியா ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. தென்புறமாக மத்திய தரைக்கடலை நோக்கியதாக காணப்படும். இது ஒரு தீபகற்பமாகும். பால்கன் பிரதேசத்தினின்றும் அட்ரியாடிக் கடல் இத்தாலியை பிரிக்கின்றது. வட ஆபிரிக்காவையும் இத்தாலியையும் பிரிப்பதும் மத்திய தரைக்கடலாகும். சிசிலி சார்டினியா என்பன இத்தாலியின் பெரும் தீவுகளாகும்.

இத்தாலி மலைத்தொடர்களைக் கொண்ட அழகிய தீபகற்பமாகும். அல்ப்ஸ், அப்பினைன் என்பனவும் இத்தாலியின் மலைத் தொடர்களாகும். மொன்ரிறோசா சிகரம் 15,203 அடி உயரமாகும். இது மத்திய அல்பஸில் காணப் படுகிறது.

தெற்கு இத்தாலியில் பல எரிமலைகள் காணப்படுகின்றன. அவற்றுள் பிரபலமானது வெசுவியஸ் எரிமலையாகும். இது கி.பி 79 ஆம் ஆண்டில் பொம்பி நகரை அழித்தது. எட்னா எனப்படும் மேலும் ஒரு எரிமலை சிசிலிதீவில் காணப்படுகிறது.

நாட்டின் நான்கில் ஒரு பகுதி சமவெளியாகும். இது " போ" சமவெளியாகும். இது அல்ப்ஸ் மலையில் உற்பத்தியாகி அட்ரியாடிக் கடலில் சங்கமமாகிறது. இத்தாலியில் 1,500 குளங்களும் காணப்படுகிறது.

அல்ப்ஸின் அடிவாரத்தில் பல் வகை இயற்கைத்தாவரங்கள் காணப்படுகின்றன. பசுமையான கோக் ஒக்,சைப்ரஸ் பீச் ஐரோப்பிய ஒலிவ் போன்ற உயரியமரங்கள் காணப்படுகின்றன.




முன்னர் காடாக இருந்த "போ" சமவெளி இயற்கைக்காடுகள் விவசாயமுயற்சிகளுக்காக அழிக்கப்பட்டு தற்போது சிறு பகுதி காடாகவும், எஞ்சியபகுதி சமவெளியாகவும் காணப்படுகிறது.

அப்பினைன் மலைத் தொடர்களிலேயே வனவிலங்குகள காணப்படுகின்றன. சிங்கம், புலி போன்ற விலங்குகளும் , நரிகளும், ஓநாய்கள், மான், மரைகளும் இங்கு காணப்படுகின்றன. பறவையினங்களில் கழுகு இனங்கள், மரங்கொத்திகள் என்பன காணப்படுகின்றன.

அங்குவாழும் மக்கள் அநேகமானோர் இத்தாலிய இனங்களாவர். அவர்கள் இத்தாலிய மொழியை தாய் மொழியாகக் கொண்டுள்ளனர்.இத்தாலியின் வட பகுதியில் வாழும் சிறுபான்மையினர் பிரஞ்சு, ஜெர்மன், ஸ்லோவேன், லத்தீன் ஆகிய மொழிகளைப் பேசுகிறார்கள். மூன்றில் இரண்டு பங்கினர் நகரங்களிலேயே வசிக்கின்றனர். ரோமில் 2.6 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். றோமுக்கு மேற்குப்புறமாக வத்திக்கான் அமைந்துள்ளது. இது கத்தோலிக்க மதத்தலைமையகத்தையும் பாப்பரசரின் வாசஸ்தலத்தையும் கொண்டுள்ளது.

மிலான் நேபிள்ஸ் டியுரின், பலர்மோ, ஜெனோவா பொலஞா புளோரன்ஸ், வெனிஸ் என்பன ஏனைய முக்கியமான நகரங்களாகும். இரண்டாம் உலகப் போரின் போது பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்தபோதும் தற்போது பொருளாதாரத்தில் அந்நாடு அபிவிருத்தியடைந்துள்ளது. 1950 களிலிருந்து பொருளாதாரத்தில் உலகில் பிரதான இடம் வகிக்கின்றது. விவசாயத்தில் கோதுமை, ஒலிவ், திராட்சை என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. கோதுமை உள்நாட்டுத் தேவைக்குப் போதுமானதாகிறது. அந்நாடு நீண்டகடற்கரையை கொண்டுள்ளதால் மீன்பிடித்தொழிலும் நன்கு நடைபெறுகிறது.

அங்கு குறைந்தளவே கனிப்பொருட்கள் காணப்பட்டாலும் இரும்பு மற்றும் உலோக கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபடுவோர் மூன்றில் ஒரு பகுதியினராகும் உல்லாசப்பிரயாணத் தொழிலும் அங்கு பிரபல்யம் பெற்றுள்ளது. கைத்தொழில்கள் நாட்டின் வரலாற்று முக்கியம் வாய்ந்த றோம் நகரை மையமாகக்கொண்டு நடைபெறுகின்றது.

கலாச்சாரத்தை பொறுத்தவரையில் இத்தாலியில் சித்திரக் கலை மேலோங்கியிருக்கின்றது. இங்கு தோன்றிய சித்திரக்கலையே அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் பரவியுள்ளன. 1265 முதல் 1321 வரையான காலப்பகுதியில் எழுத்தாளர் டான்டி அலிகைதி புகழ் பெற்று விளங்கியுள்ளார்.

இத்தாலியின் வரலாறு கிறிஸ்துவுக்கு முன்பு 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எட்ரஸ்கன் இன


வத்திக்கான் நகரம்

மக்களுடன் ஆரம்பிக்கின்றது. எனினும் இவர்கள் உரோம ஏகாதிபத்தியத்தில் வீழ்ச்சியடைந்தனர். கிறிஸ்துவுக்குப் பின் 2 ஆம் நூற்றாண்டுகளில் உரோம அதி காரம் பிரிட்டன் முதல் ஆபிரிக்கா, ஐரோப்பிய நாடுகளிலும் பரவின.

எனினும் 4, 5ஆம் நூற்றாண்டுகளில் பார்பரியன்களின் இராணுவ நடவடிக்கையால் மேற்குப் பகுதியில் உரோம அதிகாரம் சீரழிந்தது. அதன் பின் கி.பி.800 ஆம் ஆண்டளவில் இத்தாலி தனியரசுக்காகப் போராடி வெற்றிபெற்றது. 1861 ஆம் ஆண்டு இத்தாலி தனியதிகாரத்தைப் பெற்றது. பதினொராம் இம்மானுவல் போராட்டத்தில் வெற்றிபெற்றார்.

1914-18 வரை இத்தாலி, ரஷ்யா, பிரான்ஸ் ,பிரிட்டன் ஆகியநாடுகளுடன் இணைந்து இரண்டாம் உலப் போரில் ஈடுபட்டது.

அதன் பின்னர் 1946ஆம் ஆண்டுதேர்தலில் வாக்களித்து மக்கள் குடியரசை உருவாக்கினர். அதன் பின் பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் கண்டு ஐரோப்பாவில் செல்வந்த நாடாக உருவெடுத்துள்ளது. 1949 இல் "நேட்டோ" அமைப்பில் இணைந்ததுடன் 1955 ஆம்ஆண்டு ஐ.நா.விலும் அங்கத்துவம் பெற்றது. இதன்பரப்பளவு 301230 சதுரகிரோமீற்றராகும். இங்கு புழக்கத்திலுள்ள நாணயம் யூரோ.

## றோபோக்களைப் பயன்படுத்தி ஒட்டகப்பந்தயம்



ஐக்கிய அரபு எமிரேட்ஸிலுள்ள கத்தார் நாட்டில் முன்பு ஒட்டகப் பந்தயம் நடைபெற்று வந்தது. இதில் சிறுவர்களைத்தான் பயன்படுத்துவார்கள். இந்தப் பந்தயத்தில் சிறுவர்கள் மரணமடைந்ததையொட்டி ஐக்கிய அரபு எமி ரேட்ஸ் ஒட்டகப் பந்தயத்திற்கு தடை விதித்துவிட்டது.

இதையடுத்து ஒட்டகப் பந்தயங்களை நடத்த முடிவு செய்த தனியார் நிறுவனங்கள் அதற்கு ஒரு வழிகண்டன. சிறுவர்களுக்கு பதிலாக ரோபோக்களை பயன்படுத்தமுடிவுசெய்தது. அதற்காக ஒட்டக முதுகில் அமர்ந்து ஒட்டகத்தை நடத்த வசதியாக ரோபோவை வடிவமைத்தது. அந்த ரோபோவைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள், ரோபோ கையில் சாட்டையும் கடிவாளமும் இருப்பதைக் காணலாம். இது ரோபோ ஜாக்கியாகும்.

ஒட்டகப் பந்தயத்திற்கு பயன்படுத்த சிறுவர்கள் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து வளைகுடா நாடுகளுக்கு கடத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூளைப்புற்று நோய்க்கு செல்லிடத்தொலைபேசி காரணமா?

செல்லிடத்தொலைபேசி பயன்படுத்துவதால் மூளைப் புற்றுநோய்வருமா? இல்லையா? என்பது பற்றி இன்னமும் சந்தேகம் தீரவில்லை. இது தொடர்பாக ஏற்கனவே நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளில் செல்லிடத் தொலைபேசிக்கும் மூளைக் கட்டிகளுக்கும் சம்பந்தம் இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என கூறப்பட்டது. அதற்கான ஆதாரமும் கிடைக்கவில்லை. இருப்பினும் ஒரு சில நிபுணர்கள் செல்லிடத்தொலை பேசிகளில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சானது மூளைப்புற்றுநோயை உருவாக்கும் வாய்ப்புஉள்ளதாக தெரிவித்தனர். ஆனால் அதை அவர்களால் திட்டவட்டமாக உறுதி செய்ய முடியவில்லை.


இந்நிலையில் ஸ்டோக் ஹோமைச் சேர்ந்த நிபுணர்கள் குழு மேற்படி கூற்றில் உண்மை உள்ளதா? என அறிய தங்கள் பங்குக்கு ஒரு விரிவான ஆய்வை மேற்கொண்டது. அதில் வாரத்தில் குறைந்தது ஒரு தடவையாவ செல்லிடத்தெலைபேசியை பயன்படுத்தியவர்களையும், பயன்படுத்தாதவர்களையும் பரிசோதனை செய்து பார்த்த போது மூளையில் எந்த வித்தியாசமும் தென்படவில்லை. செல்லிடத் தெலைபேசியைப் பயன்படுத்துவதால் கட்டிகள் தோன்றியது என்பதற்கான அறிகுறிகள் எதையும் அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. மேலும் செல்லிடத் தெலைபேசியை காதில்வைத்துக் கேட்கும் தலைப் பகுதியில் மாத்திரம் ரேடியோ கதிர்வீச்சினால்பாதிப்பு ஏற்படும் என்பதும் செல்லிடத் தொலைபேசியை காதில் வைக்காத இன்னொரு பகுதியில் உள்ள மூளைப் பகுதியில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்பதும் உயிரியில் ரீதியாக சாத்தியமில்லாத ஒன்று என்று அவர்கள் கூறியுள்ளனர். செல்லிடத் தொலைபேசிகளில் இருந்து வெளிப்படும் ரேடியோ கதிர்வீச்சு வலுவான மூளைக்கட்டிகளை உண்டாக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்தவை அல்ல என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளைசெல்லிடத் தொலைபேசிகளினூடாக செய்திகளை (எஸ்.எம்.எஸ்) அளவுக்கு அதிகமாக அனுப்பினால், அது உடல் நலனைப் பாதிக்கும் " என்று இத்தாலி நாட்டு டாக்டர்கள் எச்சரித் துள்ளனர் நண்பர்களுக்கும், செல்போனில் உள்ள எழுத்துக்களை தொடர்ந்து அழுத்திக்கொண்டே இருந்தால், தசை நார்களில் வலி ஏற்படும் என்றும் அவர்கள் எச்சரித் துள்ளனர்.

வடக்கு இத்தாலியிலுள்ள சவோனா நகரைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி நாள்தோறும் குறைந்தது 100 முறை எஸ்.எம்.எஸ்.களை அனுப்புவதை வாடிக் கையாகக் கொண்டிருந்தாள். இதனால் அவள் கைவிரல்களில் வீக்கம் ஏற்பட்டது. இதற்காக அவள் ஒரு முட நீக்கு இயல் நிபுணரிடம் சிகிச்சை பெற்று வருகிறாள். மருந்து கொடுத்ததோடு கை விரல்களுக்கு ஓய்வு கொடுக்கும்படி டாக்டர்கள் கூறினர் இதைத்தொடர்ந்துதான் இத்தாலி நாட்டு டாக்டர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

# மீண்டும் புத்துயிர் பெறுமா கரையோரப்பாடசாலைகள்

## “ஏதாவது சத்தம் கேட்கின்ற போது ஆ... சுனாமி வருகின்றது என்று சிறுவர்கள் சொல்லிக் கொண்டு ஓடி வருகின்றார்கள் என்று பெற்றோர்கள் ஆதங்கப்படுகிறார்கள்,,



இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை ஆயுதமாக வைத்துக்கொண்டு சிறிலங்காப் பேரினவாதிகள் எமது மக்களையும் உலகினையும் ஏமாற்றிவருகின்றனர். யுத்த நிறுத்தம் நிறைவேற்றப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்தும் கூட சிறிலங்கா அரசினால் எமது மக்களுக்கு எதுவித நன்மைகளும் ஏற்படுத்தப் படவில்லை.

தமிழர் வாழ்வில் எத்தனை இழப்புக்கள் துன்பங்கள் பின்னடைவுகள் இத்தனைக்கும் மத்தியில் வாழ்க்கைச் சக்கரத்தை செலுத்துவது உறுதி தளராத தன்நம்பிக்கை யாகும். மனிதனின் வாழ்விலே முடியாதது என்ற வார்த்தைக்கு இடமில்லை. முயன்றுபார் இமயமலை உன் காலடியில் சமுத்திரம் உன் கையில் என்ற கவிஞர்களின் கருத்து. இன்றைய காலகட்டத்தில் எம்முடைய வாழ்க்கையில் எத்தனையோ இழப்புக்கள் அதிலும் யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு மீள எழுகின்ற வேளையில் இயற்கை அனர்த்தமான சுனாமியால் இரத்தபாசங்கள் உறவுகள் செத்துமடிந்த சோகவரலாற்றை எண்ணியபடி இன்னும் எத்தனை காலம் தள்ளுவது அதிலும் பாதிக் கப்பட்ட பள்ளி மாணவச் செல்வங்களை தேற்றி அவர்களுக்கு இயல்பு நிலையை ஏற்படுத்தவேண்டிய கட்டாய தேவை அனைவருக்கும் உண்டு. தற்போதுள்ள நெருக்கடியான




சூழலில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப்பிரதேச மாண வர்கள் நிலை கவலைக் கிடமானது. சிறுவர்கள் பாடசாலைக்கு போவதற்கு வசதியில்லாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான வடக்கு கிழக்கு பிரதேச அடிப் படைப்பிரச்சினைகள் பற்றிஅரசாங்கம் கவலைய டைவதில்லை. சிறிலங்கா அரசாங்கம் எந்தவிடயத்தில் அதிகளவு அரசியல் லாபம் சம்பாதிக்கமுடியுமோ அந்த விடயங்கள் பற்றியே அதிகம் பேசிவருகின்றது. இவ்வாறான அடிப்படையான அத்தியா வசியமான விடயங்கள் பற்றி பேசுவதில்லை. இவ் வாறான நிலையில் தான் கரையோரப்பாடசாலை மாணவர்களின் கல்வி கடற்கோளின் பின்னர் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

பாடசாலை நேரங்களில் கூட கடற்கோள் மீண்டும் வருகின்றது என்று பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் ஓடி வந்த சம்பவங்களும் நடந்திருக் கின்றன. மனோரீதியான பாதிப்புக்களுக்கு மத்தியில் அவர்களது கல்வியை மேலும் தொடர்வதிலான பிரச்சி னைகள் பற்றி ஆராய்வுகள் மிக முக்கியமானவை. அவை மட்டுமன்றி ஏதாவது சத்தம் கேட்கின்ற போது ஆ... சுனாமி வருகின்றது என்று சிறுவர்கள் சொல்லிக்கொண்டு ஓடி வருகின்றார்கள் என்று பெற்றோர்கள் ஆதங்கப்படுகி றார்கள்.

மனோரீதியான உள வளப்பயிற்சிகள் மாணவர் இடையே நடைபெற்று வருகின்ற போதிலும் அவர்களது அடிமனதில் வடுவாகப் பதியப்பட்ட இச்சம்பங்களை மறக்கச்செய்ய முடியுமே தவிர மறைத்து வைக்கமுடியாது. சிறுவர்களைப்பாதுகாக்கவேண்டிய தேவையுள்ளது. இன்றைய மாணவர்கள் நாளைய உயர்ந்த சமுதாயம். இவர்களைக்காப்ப தன் மூலம் தான் எதிர்கால சமுதாயத்தை உருவாக்க முடியும். அரசாங்கம் இன்னும் தமிழ் மாணவர்கள் நலன்களில் எந்த ஈடுபாடும் காட்டவில்லை. இவர்களின் வாழ்க்கையில் எந்தத்திருப்பு முனையையும் ஏற்படுத்த முயற்சி செய்யவில்லை. இதனால் அரசின் மாற்றான் தாய் மனப்பான்மையை கட்டடங்கள் கூட மட்டுமன்றி திட்டமற்ற தன்மையையும் எடுத்துக்காட்டுகின்றது.

யுத்தத்தால் இடிந்துபோன கட்டடங்களிலும் மரநிழல் களிலும் தமது கல்வியை சவாலாக ஏற்று பல்கலைக் கழகம் வரைசென்று பட்டப்படிப்பையும் பலர் முடித்துள்ளனர். இன்று இடிந்த பாடசாலைக் கட்டங்கள் கூட கடற்கோளின் சீற்றத்தால் துடைத்தழிக்கப்பட்டு, அநாதரவாக ஆக்கப்பட்டு விட்டன. தான் கல்வி கற்ற பாடசாலையை இழந்து ஓடியாடித்திரிந்த மண்ணை இழந்து வீட்டை இழந்து உறவுகளை இழந்து கொட்டும் கோடை வெயிலில் தொண்டு நிறுவனங்களினால் கொடுக்கப்பட்ட கூடாரங்க ளிலும், நில விரிப்புக்களிலும் இருந்து எப்படி கல்வியைத் தொடரமுடியும். சுனாமி தாக்கி நான்கு மாதங்கள் கடந்து விட்டன.அதேபோல் சுனாமியால் தாக்கப்பட்ட கரையோரப் பிரதேச மாணவர்களுக்கு ஒழுங்கான, நிம்மதியான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்று நான்கு மாதங்கள் தாண்டி விட்டன. குறுகிய வகுப்பறைகள் சிறிய சிறிய இடைவெளியினுள்ளேயே இரண்டு மூன்று வகுப்புக்களை உள்ளடக்கவேண்டிய தேவை உள்ளது. இதனால் ஆசி ரியர்கள் சீரானகற்பித்தல் செயற்பாட்டில் முடியாமல் போகின்றது. அல்லது இரண்டு வகுப்புக்களுக்கும் ஒரே நேரத்தில் பாடம் கற்பிக்க



முடியாதுள்ளது. இதனால் ஒட்டுமொத்தமாக பாதிக்கப் படுகின்றவர்கள் இந்த மாணவர்களே!

இந்த ஆசிரியர் மாண வர்கள் இடையே ஒரு ஆதங்கம் உள்ளது. அரசாங்கமோ அல்லது எங்களுடைய பிரதேசத்தில் பணிபுரிகின்ற தொண்டு நிறுவனங்களோ எங்கள் பாடசாலைகளையும், நாம் இழந்து நிற்கின்ற கல்வியையும் தேடித்தர மாட்டார்களா?என்பதே அதுவாகும்

**வீ.பிரதீபன்**

சுனாமியின் பின் அதிகமான தொண்டு நிறுவனங்கள் அறிமுகமா கியுள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாகப் பார்வையிடும் சில நிறுவ னங்கள் அது செய்து தருகின்றோம், இது செய்து முடிக்கின்றோம் என வாக்குறுதிகளை வழங்கி விட்டு சென்று விடுகின்றன. மீண்டும் வருவார்களா வந்து உதவ மாட்டார்களா என்ற எதிர்பார்ப்பு. ஆனால் அந்த எதிர்பார்ப்பு வீணடிக்கப் படுகின்றது, மக்களுக்கு விசனத்தை ஏற்படுத்துகின்றது.

கரையோரப்பிரதேச பாடசாலைகளுக்கு அன்று தொட்டு இன்று வரைக்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்து வந்துள்ளது.

போக்குவரத்து வசதிகள் குறைந்த நிலையிலும் வெளி மாவட்டங்களில் இருந்து ஆசியர்கள் வந்து இந்த மாணவர்களுக்கு கற்பித்துச் செல்கின்றார்கள். உண்மையிலேயே இந்த ஆசிரியர்கள் தன்னலம் பாராது ஒரு சேவை மனப்பான்மை யுடன் தான் தங்கள் சேவைகளைச்செய்கின்றார்கள். இந்த ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதிகளோ கட்டட வசதிகளோ இல்லை. தங்குவதற்கு ஒழுங்கும் இன்னும் செய்யப்படவில்லை. அயல்வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும், உறவினர்கள் வீடுகளிலுமே தங்கி நிற்கின்றார்கள்.

இப்படியே பாதிக்கப்பட்ட மாணவர்களின் வாழ்க்கை நிலை பின்தள்ளப்படின், எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தையோ அல்லது நற்பிரஜை ஒன்றையோ தோற்றுவிக்கமுடியாமல் போய்விடும். எனவே எதிர்கால சமூக வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கரையோரப்பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட பாடசாலை களை துரிதகதியில் கட்டியெழுப்பி அதிலும் பாதிக்கப்பட்ட பள்ளி மாணவச்செல்வங்களைத் தேற்றி அவர்களின் வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்தி ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்தவேண்டும்.

அரசினால் புறந்தள்ளப்பட்டு போரினால் சிக்கித்தவித்த வர்கள் தமிழ்மக்கள். தற்போது நிலவுகின்ற அமைதியான சூழலில் நடக்கின்ற நிழல் யுத்தத்திற்கும் முகம் கொடுத்து துன்பப்படுபவர்களும் இவர்களே. எமது தேவை களையும், உரிமைகளையும் கடந்த வருடங்களிலும் சரி தற்போதும் சரி மகஜர்கள் மூலமாகவும் பேச்சுவார்த்தை மேசைகளிலும் அரசிற்கு தமிழ் மக்களின் உரிமை என்ன என்பதை தெளிவாகக் கூறி வருகின்றோம்.ஆனால் அரசோ யுத்தத்திற்கான வழிகளையே காட்டிநிற்கின்றது.

சிங்கள அரசாங்கத்தின் இந்தப்போக்கு தமிழர்களின் கல்வி நிலையில் மேலும் பாதிப்பை உண்டு பண்ணுமென்றே கூறலாம்.

# ரூபவாகினி ஒளிபரப்பில் ஏற்பட்ட தடை ஜே.வி.பி.யின் நாசவேலையா?

இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் ஒளிபரப்பு நேற்று முன்தினம் சுமார் அரை மணி நேரம் தடைப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரவு 7.30 முதல் 8.00 மணி வரை இந்தத் தடை ஏற்பட்டிருந்தது. பேதுருதாலகால மலையிலுள்ள பிரதான ஒளிபரப்புக் கோபுரத்துக்கு தவறான மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டமையே இந்த ஒளிபரப்பு தடைக்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.எனினும் இது திட்டமிட்ட சதி முயற்சியாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்க ஊடகங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான நடவடிக்கையில் ஜே.வி.பி இறங்கியுள்ளதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து ஜே.வி.பியுடன் ஆதரவுப் போக்கினை கொண்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இருந்து பெரும்பாலான பொறுப்புகளை சனாதிபதி கையேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் சனாதிபதிக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் ஜே.வி.பியினரால் நாடளாவிய ரீதியல் அரசாங்க தொலைக்காட்சி ஒளிபரப்பு தடைப்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் ஊகங்கள் வெளியாகியுள்ளன.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைக்க மேலும் 170கோடி ரூபா நோர்வே ஒதுக்கியது

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைப்பதற்கு நோர்வே அரசாங்கம் 170கோடி ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது. இந்த நிதியுதவியானது பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுமென கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்து தாம் கவலையடைவதாகத் தெரிவித்துள்ள இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்கைத்தரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கிலேயே தாம் இந்த நிதியுதவியை வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கு நோர்வே அரசாங்கம் ஏற்கனவே 80கோடி ரூபா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிலிருந்து திரும்பும்அகதிகளுக்கு அவுஸ்திரேலிய அரசு 3 மில்.டொலர் உதவி

இந்தியாவிலிருந்து திரும்பும் இலங்கை அதிகளுக்கு உதவுவதற்கென 3மில்லியன் அவுஸ்ரேலிய டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு அவுஸ்ரேலிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்த நிதியுதவியை புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பினூடாக அவுஸ்ரேலிய அரசாங்கம் வழங்கத் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக அவுஸ்ரேலியத் தூதுவர் கிரேக் பிரெஜ்ஜற்கும், புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கைக் கிளையின் தலைவர் ஷிகானுக்குமிடையில் பேச்சுவார்த்தையொன்று இடம் பெற்றுள்ளது.

கடந்த போர்க்காலத்தில் இந்தியாவிற்குச் சென்று தற்பொழுது மீண்டும் இலங்கைக்குத் திரும்பும் அகதிகளுக்கு உதவவேண்டிய கடமையிருப்பதாகவும்,

இதற்கென தாம் 3மில்லியன் அவுஸ்ரேலிய டொலர் நிதியுதவி வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும் அவுஸ்ரேலிய தூதுவர் கிரேக் பிரெஜ் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து, இலங்கைக்கு திரும்பிவரும் அகதிகள் மீண்டும் சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கான உதவிகள், கல்வி, சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு இந்த நிதியுதவி பயன்படுத்தப்படுமென அவர் கூறியுள்ளார்.

# நீர்வளத்தை விற்பனை செய்யும் பிரேரணையை பாராளுமன்றில் தோற்கடிப்போம்

## ஜே.வி.பி யின் அமைச்சர் தெரிவிப்பு

தேசிய நீர்கொள்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நாட்டின் தேசிய சொத்துக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்த தாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோமெனத் தெரிவித்துள்ள ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினரும், விவசாயத்துறை அமைச்சருமான அனுரகுமார திஸ்ஸநாயக்க, இலங்கையின் நீர்வளத்தினை விற்பனை செய்யும் நோக்கத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையை ஏற்கப்போதில்லையெனக் கூறியுள்ளார்.

கூட்டமைப்பு அரசாங்கம் இந்தப் பிரேரணையை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொண்டால், ஜே.வி.பியின் 39உறுப்பினரைக் கொண்டு அந்தப் பிரேரணையைத் தோற்கடிப்போமெனவும் விவசாயத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சு தேசிய நீர்கொள்கையை பாராளுமன்றத்தில் மாற்றுவதற்கு முயற்சித்துவருகிறதெனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனினும், அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாமல் பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை சமர்ப்பிக்க முடியாதெனக் கூறியுள்ளார்.

தேசிய நீர்க்கொள்கையை மாற்றியமைப்பதற்கு ஒருபோதும் தாம் இடமளிக்கமாட்டோமென அனுரகுமார திஸ்ஸாநாயக்க மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# மி.சபையை தனியார் மயமாக்க முயற்சிப்பவர்களை எச்சரிக்கிறது மின்சாரசபை ஊழியர் தொ.சங்கம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையினை இல்லாதொழிக்க முக்கிய சக்திகள் செயற்படுவதாக மின்சார சபை ஊழியர்கள் தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.மின்சார சபையை தனியார்மயமாக்கி அதனை இல்லாதொழித்துவிட முனைபவர்களின் நடவடிக்கைகளை தாங்கள் தொடர்ந்தும் மௌனமாக பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை என தொழிற்சங்கத் தலைவர் நிமரலட்ன தெரிவித்துள்ளார். மின்சார சபைக்கு பொறுப்பான அமைச்சர் சுசில்பிரேமஜயந்த தனியார் மயமாக்கலுக்கு எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்ற போதிலும் அவருடைய அமைச்சரவை சகாக்கள் சிலரால் மின்வார சபையை அழிப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கண்காணிப்புக் குழுவிடம்முறைப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடியில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு கான்ஸ்டபிளின் மரணம் தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார். இதே வேளை நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகள் இடம்பெறவுள்ளதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் மேலும் கூறியுள்ளார். குருநாகலைச் சேர்ந்த ஏ.டி செல்ட்டன் நவரட்ண என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே இதன் போது கொல்லப்பட்டவராவார்.

# கண்டி சிறுவர் வைத்தியசாலை கணக்குக் குறித்து மருத்துவ சங்கம்கேள்வி

கண்டியில் அமைக்கப்பட்டு வரும் சிறுவர் வைத்திசாலை தொடர்பாக அரசாங்க மருத்துவ சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் இது தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டன

ஒஸ்திரிய அரசாங்கத்தின் உதவியுடன் 460 மில்லியன் ரூபா செலவில் கண்டியில் சிறுவர் வைத்தியசாலை ஒன்று முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் அமைக்கப்பட்டது.

தற்சமயம் அதன் பணிகள் நிறைவுற்றுள்ளபோதும் அது எப்போது மக்களுக்காக திறக்கப்படும் என்பது தெரியவில்லை.

இதேவேளை இந்த வைத்தியசாலை அமைப்புக்கு 460 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் அதில் 210 மில்லியனுக்கான கணக்குகள் வெளிப்படுத்தப்படவில்லை.

குறித்த வைத்தியசாலையில் புதிய மருத்துவ உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டபோதும்,அங்கு பழைய உபகரணங்களே பொருத்தப்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ சங்கத்தினர் தெரிவித்தனர்.எனவே இது தொடர்பில் ஊடகத்துறையினர் சுகாதார அமைச்சிடம் விளக்கங்களை கேட்கவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# சுனாமி அனர்த்தம் தொடர்பாக பரிசீலிக்க நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்தது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் தொடர்பான விடயங்களைப் பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட விசேட சனாதிபதி ஆணைக்குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி ஏச்.எஸ். யாப்பா இதன் தலைவராகவும், முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ரீ.ஏச்.ஏ குலத்திலக இதன் உறுப்பினராகவும் கடமையாற்று கின்றனர்.

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி சுமாத்திராத் தீவுக்கருகில் ஏற்பட்ட நில அதிர்வு குறித்து அரச நிறுவனம் ஒன்றிற்கு தகவல் அனுப்பப்பட்டதாக தெரியவந்துள்ளது.

அவ்வாறு முன்னறிவித்தல் கிடைத்திருந்தால் மக்களுக்கு ஏன் தெளிவுபடுத்தவில்லை எனவும் இதன்மூலம் அரச அதிகாரிகள் தமது கடமைகளைத் தவறவிட்டுள்ளனரா என்பது குறித்தும் இந்த ஆணைக்குழு பரிசிலிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக எச்சரிக்கை சமிக்ஞைகளை வழங்குவதற்கு இருக்கின்ற வாய்ப்புக்கள் தொடர்பாகவும் ஆணைக் குழு முன்மொழியும்.

ஆணைக் குழுவின் முன்னால் சாட்சியம் அளித்த பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் கப்பில திஸ்ஸநாயக்க இலங்கை எந்த நேரத்திலும் சுனாமி ஏற்படும் வலையத்தில் அமைந்திருப்பதால் புவியியல் தகவல் மத்திய நிலையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

இதேபோல் கரையோரப் பிரதேசங்களில் உயர் தடுப்புச் சுவர்களை அமைப்பதன் மூலம் பெரிய கட்டடங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுக்க முடியும் எனவும் சாட்சியம் அளித்தார்.

# தொடருந்து –பேருந்து விபத்துக் குறித்த விசாரணையை 3 வாரங்களில் முடிக்குக!

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

பொல்காவலைப்பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தொடருந்து பேருந்து , விபத்துத் தொடர்பான நீதிமன்ற விசாரணைகளை மூன்று வாரத்திற்குப் பூர்த்தி செய்யுமாறு ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெப்பட்டிபொல அமரகீர்த்தி தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பேருந்து செலுத்துநர்களின் இவ்வாறான கவனயீனங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுப் போக்குவரத்தானது தற்பொழுது இலாபமீட்டும் துறையாக மாறியிருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார்.விபத்துத் தொடர்பான விசாரணைகளை நடாத்துவதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான அனைத்து [illegible]களையும் இந்த விசேட குழு மூலம் [illegible]தாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அமல் குமாரகே தெரிவித்துள்ளார். காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருபவர்கள் தொடர்பான விபரங்களை திரட்டவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் புதிய சட்டமூலங்களைக் கொண்டுவருவதற்குத் தீர்மானித்திருப்பதாக சிறிலங்கா போக்குவரத்துத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடருந்து கடவைகள் இருக்குமிடங்களில் மேம்பாலங்களை அமைக்கும் யோசனையொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவிருப்பதாக சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இந்த யோசனை தொடர்பாக ஆராயும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள பிரதமர், மேம்பாலங்களை அமைப்பதன் மூலம் எதிர்காலங்களில் இவ்வாறான பாரிய விபத்துக்கள் ஏற்படாது தடுக்கமுடியுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஐந்து அதிபர்கள் குறித்தவிசாரணை அறிக்கையை சனாதிபதி விசாரணைப் பிரிவு இதுவரை சமர்ப்பிக்கவில்லை

இலஞ்ச மோசடிக் குற்றஞ்சாட்டப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்படவில்லையென கல்வியமைச்சுத் தெரிவித்துள்ளது.

பதவிஇடை நிறுத்தம் செய்யப்பட்ட ஐந்து தேசிய பாடசாலை அதிபர்கள் தொடர்பான அறிக்கைகளை சனாதிபதி விசாரணைப் பிரிவு இதுவரையில் சமர்பிக்கவில்லையென சிறிலங்கா கல்வியமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி விசாரணைப் பிரிவு தனது அறிக்கைகளை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டு பின்னரே கல்வியமைச்சிடம் கையளிக்கப்படுமென கல்வியமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற பின்னரே குற்றஞ்சாட்டப்பட்ட அதிபர்கள் மீது ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சேவைஇடை நிறுத்தம் செய்யப்பட்ட அதிபர்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் ஒப்படைக்குமாறு பொதுச் சேவைகள் ஆணைக்குழு, கல்வியமைச்சிடம் கோரியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அமைச்சர் லல்லுவை பதவி விலகக் கோரி பா.ஜ.கட்சியால் பாராளுமன்றம் பகிஷ்கரிப்பு

மத்திய மந்திரி லல்லுப்பிரசாத் யாதவ் பகர் முதல் மந்திரியாக இருந்தபோது கால் நடைத்தீவனத்தில் ஊழல் செய்தார் என்று ராஞ்சி சிறப்பு நீதிமன்றில் குற்றப்பத் திரிகைத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே அவரை மத்திய மந்திரி பதவியிலிருந்து நீக்கக் கோரி பாரதிய ஜனதா உறுப்பினர்கள் மூன்று நாள் பாராளுமன்றப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனா.

நேற்று முன்தினம் வாஜ்பாய் தலைமையில் தேசிய ஜனநாயக் கூட்டணி தலைவர்கள் சனாதிபதி அப்துல் கலாமைச் சந்தித்து மனுக்கொடுத்தனர். அதில் அவர்கள் குற்றம் சாட்டப்பட்டள்ள கிரிமினல்களை அமைச்சரவை யில் நீடிக்க அனுமதித்து அதை நியாயப்படுத்தும் பிரதமரின் செயல் கண்டிக்கத்தக்கது. எனவே இதில் நீங்கள் தலையிட்டு லல்லுவை அமைச்சரவையிலிருந்து நீக்க அறிவுறுத்த வேண்டும் என்று கூறியிருந்தனர்.

தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி நேற்று பா.ஜ.க.சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்றாவது நாளாக பாராளுமன்றத்தைப் புறக்கணித்தனர்.

இந்த நிலையில் லல்லு பிரசாத்யாதவ் மீது மற்றொரு புதிய ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. வெள்ள நிவாரண நிதியில் நடந்த ஊழலில் அவருக்குத் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநிலத்தில் கடந்த ஆண்டு கடுமையான மழை பெய்ததால் எதிர்பாராத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் வெள்ளம் சூழ்ந்த காரணத்தால் பாதிப்புக்குள்ளானார்கள்.

வெள்ளத்தில் சிக்கியவர்களுக்கு விமானம் மூலம் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் போடப்பட்டன. இந்த நிவாரணப் பொருட்களை வழங்கும் ஒப்பந்தத்தை பீகார் சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் பெற்றிருந்தது.

இந்தவகையில் வெள்ள நிவாரண பணிகளுக்கென 18 கோடி இந்திய ரூபா செலவிடப்பட்டது. இதில் பெருமளவு ஊழல் நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பீகார் சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வழங்கிய கடிதத் தின் அடிப்படையில் தனியார் நிறுனங்களுக்குப் பணம் கொடுத்தபோது பல லட்சம் கையாடல் நடந்திருப்பது தெரிய வந்தது. இந்த ஊழலில் லல்லுவுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாக பா.ஜ.க குற்றம் சாட்டியுள்ளது.

# இந்தியாவிற்கு 'வீட்டோ' கிடைக்காது; ஐ.நா பொது செயலர் கொபி அனான்



ஐ.நா பாதுகாப்புச்சபை உறுப்பினராலும் இந்தியாவுக்கு வீட்டோ அதிகாரம் கிடைக்காது என்று ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் கூறியுள்ளார். ஐ.நா. பொதுச்செயலாளர் கொபிஅனான் இந்தியா சென்று சனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, வெளியுறவு மந்திரி நட்வர்சிங், எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். சில நிகழ்சிகளிலும் கலந்து கொண்டார்.

அவர் சந்தித்த பிரமதர் மன்மோகன்சிங், நட்வர்சிங் மற்றும் கட்சித்தலைவர்கள் ஆகியோர் இந்தியாவுக்கு ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இரத்து அதிகாரத்துடன் (வீட்டோ) உறுப்பினர் பதவி தருவதற்கு சிபார்சு செய்யவேண்டும் என்று வற்புறுத்தினார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அனான் ஐ.நா. பாதுகாப்புச்சபையின் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள வாய்ப்புள்ளது. ஆனால் புதிய உறுப்பினர்களுக்கு இரத்து அதிகாரம் (வீட்டோ) கொடுப்பதற்கு தற்பொழுது வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகள் சம்மதிக்காது பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்பினர் ஆவது என்ற இந்தியாவின் விருப்பம் நியாயமானது என்று பல நாடுகள் கருதுகின்றன எனவும் தெரிவித்தார்.

# சாண்டி சோனியாவைச் சந்தித்தார்

கேராள முதல்வர் உம்மன் சாண்டி நேற்று முன்தினம் டில்லியில் கட்சித்தலைவர் சோனியாவைச் சந்தித்துப் பேசினார். கேரளாவில் கட்சிக்குள் தற்போது நிலவிவரும் குழப்பம் குறித்து அவரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

சோனியாவின் இல்லத்தில் நடந்த இந்தச் சந்திப்பின் போது கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் முதல்வருமாகிய கருணாகரன் தொடர்ந்து சர்வாதிகாரப் போக்கையே கடைப்பிடித்து வருவதுடன் மே முதல் திகதி திருச் சூரில் நடைபெறும் மாநாட்டில் புதிய கட்சி தொடங்கப்போகிறார் என்ற விபரம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்துத் தெரிவித்தார். சோனியாவிடம் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து நிருபர்களிடம் எதுவும் தெரிவிக்கமறுத்துவிட்டார் சாண்டி.

## முதல் திருப்பலி அழைப்பு



அருட்திரு
ஆசீர்வாதம்பிள்ளை அன்ரன் புனிதகுமார்

அன்புடையீர்,

முல்லைத்தீவு புனிதஇராயப்பர் ஆலயத்தின் முதற்குருமணி அருட்திரு ஆ. அன்ரன் புனிதகுமார் தனதுமுதல் நன்றித் திருப்பலியை 03.05.2005 செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு முல்லைத்தீவு செல்வபுரம் புனித யூதாததேயு ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.

இந்நன்றித் திருப்பலியில் இணைந்து இறைவனுக்கு நன்றி செலுத்த அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| பங்குத்தந்தையும், | திரு. திருமதி |
| பங்கு மக்களும், | ம. ஆசீர்வாதம்பிள்ளை, |
| முல்லைத்தீவு. | செல்வபுரம், |
| | முல்லைத்தீவு. |

(6055)

## சாவு அறிவித்தல்



அமரர்
பண்டாரம் பாலகிருஷ்ணன்

201,ஜெயந்திநகர்,கிளிநொச்சியில் வசித்து வந்தவரும், தற்போது, பூதர்மடம், கோப்பாயில் வசித்து வந்தவருமாகிய திரு பண்டாரம் பாலகிருஷ்ணன் அவர்கள் 27.04.2005(புதன்) இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் திருமதி பா. மகேஸ்வரியின் அன்புக் கணவரும் வனிதாமணி (முன்னாள் ஆசிரியை-கிளி கனகபுரம் ம.வி),அமுதன்(பிரான்ஸ்) சத்தியபாமா. (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவபாலன் (கண்ணன்), கங்கா,சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜா, கபிலன்,பானுஜா,கஜானி,அபிநன் ஆகியோரின் அன்புப் பேரனும்ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 02.05.2005 (திங்கள்) அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| வாரணாசி, | தகவல் |
| பூதர்மடம்,பருத்தித்துறைவீதி, | ஏ.தேவபாலன் (கண்ணன்) |
| கோப்பாய். | மருமகன்) |

(5920)

# பதவி வெற்றிடம்

## ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனம்

பதிவு இல: கிளி/அ.சா. நி/03

கிளிநொச்சி, யாழ்ப்பாணம்,மன்னார்,வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் பலதரப்பட்ட புனர்வாழ்வுத்திட்டங்களை அமுல்படுத்தும் இந்நிறுவனமானது, கீழ் காணும்பதவிகளுக்கு தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருகின்றது.

அ) **பதவி:- பொறியியலாளர்-வெற்றிடம்-01**

கல்வித்தகைமைகள்:- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியலாளருக்குரிய தகைமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்வேண்டும்.அத்துடன் 05 வருட அனுபவம் பெற்றவர்க்கு முன்னுரிமை உண்டு. பதவியில் இருந்து இளைப்பாறியோராயினும், தேகநல்லாரோக்கியம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை:- 25 இற்கு மேற்பட்டோர்.

ஆ) **பதவி:- தொழில்நுட்ப உத்தியோகத்தர்-வெற்றிடம்-01**

கல்வித்தகைமைகள்:- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியின் தகைமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்வேண்டும். 05 வருடத்திற்கு குறையா முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு. சேவையில் இருந்து இளைப்பாறியோராயினும் தேக நல்லாரோக்கியம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை:- 25 இற்கு மேற்பட்டோர்.

இ) **பதவி:- உதவித்திட்ட முகாமையாளர்கள்-வெற்றிடம்-03**

கல்வித்தகைமைகள்:- அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பீ.ஏ/பீ.எஸ்.சி/பி.கொம் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். ஆங்கிலம் சரளமாகப்பேச,வாசிக்க எழுதத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். சிங்களம் பேச,வாசிப்பது விசேட தகைமையாகக் கருத்தப்படும்.

ஏனையதகைமைகள்:- வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும். 5 வருடங்களாவது முன்னர் பணிபுரிந்தமை கவனத்திற்கொள்ளப்படும்.

வயதெல்லை:- 30 தொடக்கம் 45 வரை

ஈ) **பதவி:- திட்ட இணைப்பாளர்கள்-வெற்றிடம்-04**

கல்வித்தகைமைகள்:- க.பொ.த.(உ/த) அல்லது அதற்குச் சமமான பரீட்சை ஒன்றில் உயர் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தமிழ், ஆங்கிலம் சரளமாகப் பேசும் ஆற்றல் உள்ளவர்களாகவும்,அரச சார்பற்ற நிறுவனங்களில் 05 வருடங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்த அனுபவமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஏனையவை:- வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை:- 25 முதல் 45 வரை

உ) **பதவி:- திட்ட வரைஞர்-வெற்றிடம்-01**

கல்வித்தகைமைகள்:- க.பொ.த.(உ.த) சித்தியடைந்தவராகவும், திட்டவரைதலில் ஆகக் குறைந்தது 10 வருடங்களாவது அனுபவம் பெற்றவராகவும், தமிழ், ஆங்கிலம் சரளமாகப் பேச,எழுத வாசிக்கத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை:- 30 மேற்பட்டோர்.

ஊ) **பதவி:- விவசாய உத்தியோகத்தர்-வெற்றிடம்-01**

கல்வித்தகைமைகள்:- அங்கீகரிக்கப்பட்ட விவசாயக் கல்லூரியின் சான்றிதழ் பெற்றவர்களும், சேவையில் இருந்து இளைப்பாறியோராயினும் தேக நல்லாரோக்கியம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை:- 25 இற்கு மேற்பட்டோர்.

சம்பளம்:- சகல பதவிகளுக்கும் அவரவர் கல்வித்தகைமைகளுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி:- 31.05.2005

விண்ணப்பங்கள் யாவும் 9"x4"படிவத்தில் சுயமாகத் தயாரிக்கப்பட்டு கல்வித்தகைமையின் நிழற்பிரதியுடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

முகவரி:- பணிப்பாளர்,
ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனம்,
தலைமைப் பணிமனை,
பாரதிபுரம் வீதி,
கிளிநொச்சி.

(சி.11828)

# ஒரு நாள் போட்டியில் விளையாட லக்ஷ்மன் விருப்பம் தெரிவிப்பு



இந்தியாவின் துடுப் பாட்ட வீரரான வி.வி.எஸ். லக்ஷ்மன் ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்க மிகுந்த ஆர்வமுடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் பி.சி.சி.க்கு அளித்த பேட்டியில், ஒரு நாள் போட்டித் தொடரில் இணைக் கப்படாமை தனக்கு பெரும் ஏமாற்றமளிப்ப தாகக் கூறியுள்ளதுடன் பாகிஸ்தானுடனான ஒரு நாள் தொடரில் இணைக்கப்பட்டிருந்தால் படு தோல்வியில் இருந்து அணியை மீட்டி ருக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அணிக்காக தொடர்ந்து திறமை காட்டி வந்ததாக கூறும் அவர், எந்த இக்கட்டான நிலையிலும் தன்னால் துடுப்பெடுத்தாட முடியும் என்றும் கூறினார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு நவம்பரில் கொல்கத்தாவில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான பவளவிழா போட்டியில் லக்ஷ்மன் 43 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெற்றார். தன்னை ஒரு நாள் போட்டி அணியில் இணைத்துக் கொள்ளாததை சகிக்க முடியவில்லை என்பதுடன் இந்தியாவுக்குப் பல வெற்றிகளைப் பெற்றுத் தந்துள்ளதாகவும் தெரிவிக்கும் லக்ஷ்மன் ஒரு நாள் அணியில் சேர்த்துக்கொள்ளப்படும் நம்பிக்கையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.




# என்னை யாரும் விமர்சிக்க வேண்டாம் உருக்கமாக வேண்டுகிறார் சச்சின்



என்னை யாரும் விமர்சிக்க வேண்டாம் என்று டெண்டுல்கர் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமீபத்தில் நடந்த பாகிஸ்தான் தொடரில் இந்திய அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் டெண்டுல்கரின் ஆட்டம் குறிப்பிடும் படியாக இல்லை. குறிப்பாக டில்லியில் நடந்த ஆறாவது ஒரு நாள் போட்டியில் கூட அவர் சிறப்பாக விளையாடாமல் ஏமாற்றியது. கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. டெண்டுல்கருக்கு வயதாகிவிட்டது. இப்போதே அவர் ஓய்வு பெறுவதே நல்லது என்று முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் தன் மீதான விமர்சனத்துக்கு டெண்டுல்கர் விளக்கம் அளித்துள்ளார். இதில் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு துடுப்பாட்ட பாணி இருக்கும். 16 வயதில் ஒரு பாணி இருந்தது. 20 வயது முதல் 30 வயது வரை இருந்த துடுப்பாட்ட நுணுக்கம் தற்போது மாறி இருக்கிறது. எனக்கு 32 வயதாகிறது. இந்த வயதுக்கு தகுந்தவாறு ஆடுகிறேன்.இந்திய அணியின் வெற்றிக்காக தொடர்ந்து ஆடுவதே இலட்சியம். எனது ஆட்டம் குறித்து யாரும் விமர்சனம் செய்யத் தேவையில்லை. எனது பங்கு அணியில் முக்கியம் பெற்றுள்ளது. மற்ற வீரர்களைவிட அணிக்கு நாள் தான் சீனியர். என்னால் முடியும் வரை நான் ஆடுவேன் இவ்வாறு அவர் கூறினார்.

# துடுப்பாட்டத்தில் ஏழாவது வரிசை கவலை தெரிவிக்கிறார் கைப்



என்னை ஏழாவது இடத்தில் இறக்குகிறார்களே என்று இந்திய கிரிக்கெட் வீரர் முகமது கைப் கவலை தெரிவித்துள்ளார்.

என்னை ஏழாவது இடத்தில் துடுப்பாட்டம் செய்வதற்கான களம் இறக்குகிறார்கள். இந்திய அணி சிரமமான நிலையில் இருக்கும் போது எனக்கு பொறுப்பு அதிகமாகி விடுகிறது. இதனால் துடுப்பாட்டத்தை சரியாகச் செய்ய முடிவதில்லை. வேகமாகவும் ஓட்டம் எடுக்க வேண்டும், விக்கெட் விழாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படி ஒரு இக்கட்டான நிலையில் நான் களமிறங்கும் பட்சத்தில் பெரியளவு அடித்து ஆடமுடிவதில்லை.

# பாகிஸ்தானுக்கான இங்கிலாந்து சுற்றுலா போட்டி அட்டவணை பாக். அறிவிப்பு

பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இலங்கிலாந்து கிரிக்கெட் அணி பங்குகொள்ளும் போட்டி விபரம் பற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அதன்படி இவ்வருடம் ஒக்ரோபர் 25 முதல் டிசம்பர் 22 வரை மூன்று டெஸ்ட் போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவை கராச்சியிலும், பைசலாபாத்திலும், லாகூரிலும் நடைபெறும். அத்துடன் மூன்று ஒரு நாள் போட்டிகளும் அதே மைதானங்களில் நடைபெறும். ஆயினும் பெஷாவரிலும் குயிட்டாவிலும் ஒரு நாள் போட்டிகள் நடைபெறாது.

இந்தத் தொடருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி இங்கிலாந்து பெரிதுபடுத்தாதபோதும் 2002ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய மேற்கிந்தியத்தீவு அணிகள் பாதுகாப்பைக் காரணம் காட்டி போட்டிகளைப் புறக்கணித்தமை குறிப்பிடத்தக்கது. நியூசிலாந்துடனான போட்டி நடைபெற்றவேளை அதே ஆண்டு மே மாதம் கராச்சியில் விடுதியொன்றில் குண்டுவெடித்து 14 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நியூசிலாந்து போட்டித் தொடரை நிறுத்தி தாயகம் திரும்பியதும் குறிப்பிடத்தக்கது. இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகள் 2003ஆம் ஆண்டிலும் போட்டிகளில் பங்கேற்க மறுப்புத் தெரிவித்திருந்தன.

2000ஆம் ஆண்டு நாசர் ஹூசைனின் தலைமையில் பாகிஸ்தான் சென்றதன் பின்பு இப்போது முதல் தடவையாக செல்வது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறிலங்கா கிரிக்கெட் சபையின் இடைக்கால சபையை ஐ.சி.சி.வரவேற்பு



சிறிலங்கா கிரிக்கெட் அணியில் நடைபெற்ற நிதி மோசடி காரணமாக கடந்த மாதம் அரசினால் கலைக்கப்பட்ட கிரிக்கெட் சபைக்குப் பதிலாக இடைக்கால சபை ஒன்றை அமைக்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளதை சர்வதேச கிரிக்கெட் சபை அனுமதியளிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அது கலைக்கப்பட்டபோது தலைவர் திலங்க சுமதிபால கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதுடன் அரசுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அறிவித்தார். அத்துடன் சபையை அரசு பொறுப்பேற்றது சட்டவிரோதமானது என்றும் கூறப்பட்டது. சட்ட விதிகளின் படி இடைக்கால சபை உறுப்பினர்கள் யாரும் சபைக்குரிய எந்தவிதமான அசையாச் சொத்துக்களையும் பொறுப்பேற்க முடியாது என்றும் சுமதிபால தலைமையிலான சபை தெரிவித்துள்ளது. இந்த நிலையிலேயே சர்வதேச கிரிக்கெட் சபை அதனை அங்கீகரிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளது.

# உழவர் ஒன்றிய வி.கழகம் மீதான தற்காலிகத் தடை நீக்கப்பட்டது

உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழகத்திற்கு விதிக்கப்பட் டிருந்த தற்காலிக தடை நீக்கப்பட்டுள்ளது.

கிளி. மாவட்ட விளையாட்டுத் துறையினால் 24.12.2004ஆம் திகதிய அறிவித்தலின் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் மீதான தடை நீக்கம் 02.01.2005ஆம் திகதி கிளி. மாவட்ட விளையாட்டு துறையினரின் அறிவித்தலின் மூலம் கிரிக்கெட் தவிர்ந்த ஏனைய போட்டிகளில் கலந்து கொள்வதற்கு ஏற்றவாறு தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தடகளப் போட்டிகள்

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் சிவாகரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேசும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமகாராசா ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் க.சிவாஜி தமிழீழ விளையாட் டுத் துறையின் வலிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் கபார்த்தீபனும கலந்து கொள்ளவுள்ளனர். (41)

* * *

நல்லூர் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு இடையான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலாளர் திருமதி.சு.தெய்வேந்திரம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் திருநெல்வேலி கிளை முகாமையாளர் சி.என் கெனநாதனும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ரி.மாதுளனும், மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# 2012 ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு விளையாட்டு அமைப்புக்களுக்கு ஊக்குவிப்பு

2012 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை கருத்தில் கொண்டு விளையாட்டு அமைப்புக்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதாக லண்டன் அறிவித்துள்ளதில் எவ்வித விதிமுறை மீறலும் இல்லை என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர் கிரைக் ரீடி கருத்துத் தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள ஒலிம்பிக் போட்டியைக் கருத்தில் கொண்டு, பிரிட்டனில் உள்ள விளையாட்டு அமைப்புக்களுக்கு உரிய பயிற்சியை அளிக்கும் பொருட்டு ரூ.90 கோடி உதவியை லண்டன் வழங்கவுள்ளது. மேலும் ரூ.22.50 இலட்சம் கடனாக வழங்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளது. தவிர, பிரிட்டன் விளையாட்டு அமைப்புக்கள் நாடு முழுவதும் செல்ல இலவச விமான, ரயிலில் இலவச சேவை, தொலைபேசிக் கட்டண சலுகை ஆகியனவும் அறிவித்துள்ளது. அத்துடன் ஹோட்டல், கடைகள் மற்றும் திரையரங்குகளிலும் கட்டணச் சலுகை அறிவித்துள்ளது.

லண்டனின் அறிவிப்புக்கு பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்நிலையில் கிரைக் ரீடி லண்டன் பி.பி.சி வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது. நாங்கள் யாருக்கும் கையூட்டுக் கொடுக்கவில்லை. விளையாட்டு அமைப்புக்களை மேம்படுத்தவே இம்மாதிரியான திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். இந்த அறிவிப்பில் எந்த விதி மீறலும் இல்லை. இந்த அறிவிப்பு குறித்து விவாதம் செய்வது நல்லதல்ல. விவாதம் செய்பவர்கள் விதிமுறைப்படி நடப்பதில்லை எனக் கூறியுள்ளார். சர்வதேச ஒலிம்பிக் குழுவின் ஒப்புதலுக்காக இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார். அதே சமயம் இந்த அறிவிப்பில் எந்த விதியை யும் மீறவில்லை என லண்டன் குழுவின் தலைவர் செபாஸ்டின் கோய்யும் கூறியுள்ளார்.



250 குதிரைத் வலுக்கொண்ட மோட்டார் சைக்கிள்களுக்கான கிராண்ட் பீரீ மோட்டார் சைக்கிள் போட்டி ஷாங்காய் சர்வதேச ஓடு தளத்தில் விரைவில் நடைபெறவுள்ளது. அதில் பங்கேற்கும் சீன குழுவுக்கு சைக்கிள்களை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் பிரான்ஸ் மோட்டார் சைக்கிள் தொழில் நுட்ப வல்லுநர்கள். இப்போட்டியில் ஐந்து சீன வீரர்களுக்கு நேரடி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பூநகரி பிரதேச செயலக வி.கழக பெரு விளையாட்டுப் போட்டி - 2005

பூநகரி பிரதேச பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா பூநகரி முழங்காவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 27ஆம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் மா. ஸ்ரீஸ்கந்தகுமார் தலைமையில் ஆரம்பமாகியது. சிறப்புற நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை முழங்காவில் வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஒலிம்பிக் தீபத்தினை பூநகரி விளையாட்டு உத்தியோகத்தர் க. கலாதரன் ஏற்றி வைத்தார்.

பதிவு செய்யப்பட்ட பத்து விளையாட்டு கழகங்களில் இறுதி நிகழ்வில் ஐந்து விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

இதில் செந்தாரகை 269 புள்ளிகளையும், எவரடி 45 புள்ளிகளையும், ஜெகமீட்பர் 30 புள்ளிகளையும் பெற்று முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றன.

இதில் சிறந்த விளையாட்டு வீரர்களாக செந்தாரகை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ். அனோஜன் மற்றும் கே. சதீசனும், சிறந்த விளையாட்டு வீராங்கனையாக அண்ணா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ். டினோஜாவும் தெரிவாகினர்.

இறுதியில் பரிசில் வழங்கப்பட்டதுடன் பூநகரி விளையாட்டு உத்தியோகத்தர் க. கலாதரனின் நன்றியுரையுடன் போட்டி நிறைவு பெற்றது.

# மன்னார் பிரதேச செயலர் பிரிவு வி.கழகங்களுக்கிடையிலான போட்டிகள்

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகத்தின் 2005 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மெய்வல்லுநனர் போட்டி நேற்று மாலை 2.00 மணிக்கு மன்னார், பொது விளையாட்டரங்கில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் அவர்கள் தலைமையில் இடம் பெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் 30 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. இறுதிப் போட்டிகள் இன்று இடம் பெறவுள்ளது.



## சிந்தனைக்கு

உலகில் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்கு முறையின் நெருப்பில் குளிப்பது பொது சனங்களே

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 30-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# மற்றுமொரு படுகொலை?

பிரபல பத்திரிகையாளர் டி.சிவராம் அவர்கள் நேற்று முன்தினம் இரவு கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொழும்பில் சனநடமாட்டம் உள்ளதும், கூடுதல் கண்காணிப்பிற்குள்ளான பாதுகாப்பு மிக்க பகுதியுமான பம்பலப்பிட்டியில் வைத்துக் கடத்தப்பட்டு இவர் பின்னர் சடலமாக அதிகாலையில் மீட்கப்பட்டுள்ளார்.

'தராக்கி' என்ற பெயரில் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையில் இராணுவ ஆய்வாளராகப் பிரபலம் பெற்ற இவர் பின்னர் தமிழ் ஊடகங்களில் டி.சிவராம் என்ற சொந்தப் பெயரில் இராணுவ அரசியல் கட்டுரை எழுதியவராகும். இறுதியில் 'தமிழ்நெற' என்னும் இணையத்தளத்தில் கொழும்பிற்கான களநிருபராகவும் செயற்பட்டவர்.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவராம் கொழும்பில் இருந்து செயற்பட்டுவந்தார். இவர் இராணுவ அதிகாரிகள் விமர்சகர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு இராஜதந்திரிகள், உட்படப் பல்வேறு தரப்பினருடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்ததோடு பல சிங்கள ஊடகவியலாளர்களுடனும் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார்.

கடந்தசில வருடங்களாக டி.சிவராம் சிறிலங்காப் புலனாய்வுத் துறையினரின் கெடுபிடிகளுக்கும் முகம் கொடுத்திருந்தார். கொழும்பிலிருந்த அவரது வீடும் சில தடவை பொலிசாரின் சோதனைக்கும் உள்ளாகியிருந்தது. இதேவேளை சிவராம் 2001 ஆம் ஆண்டின் இறுதியில் சிறிலங்கா ஆயுதப்படையினரின் தாக்குதலுக்கும் உள்ளாகியிருந்தார்.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குள் கருணா குழப்பம் விளைவிக்க முனைந்தபோது, கருணாவின் செயற்பாட்டைக் கண்டித்து டி.சிவராம் அவர்கள் சில கட்டுரைகளை எழுதியும் இருந்தார். இதன் மூலம் கருணா குழுவினரும் இவர்மீது ஆத்திரம் கொண்டிருந்தனர்.

வழமை போலவே டி.சிவராம் அவர்களின் கொலையைத் தொடர்ந்து சிறிலங்காப் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இக்கடத்தல் தொடர்பாக சிலர் சில தகவல்களை வழங்கியுள்ள போதிலும் எவரும் கைது செய்யப்பட்டதாக இதுவரை தகவல் எதுவும் வெளிவரவில்லை.

ஆனால் இவ்விசாரணைகள் மூலம் எத்தகைய தகவல்களும் வெளிவரமாட்டாது என்பதும், எவரும் கைது செய்[illegible]வும், தண்டிக்கப்படவும் போவதில்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்ததொன்றே. ஏனெனில், இக்கடத்தல் - கொலை என்பவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்திற்குட்பட்டவர்களாக இல்லை. ஏனெனில் இவர்களே சட்டத்தின், 'பாதுகாவலராகவுள்ளனர்'

சுதந்திர ஊடகவியலாளர் நிமலராஜன், அதன்பின்னர் ஜி.நடேசன், தற்பொழுது டி. சிவராம் எனப்படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் பட்டியல் செல்கிறது. இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தமிழ்த் தேசியப் போராட்டத்திற்கும், தமிழ் ஊடகத்துறைக்கும் பெரும் பங்காற்றியவர்களாகும். இவர்களின் படுகொலைகள் நிச்சயமாகத் தமிழ் ஊடகத்துறைக்கும் தமிழ்த்தேசியத்திற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகவே இருக்கும். வேறொருவகையில் தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயலாகும்.

கொழும்பில் ஒரு பிரபல ஊடகவியலாளர் கடத்திப் படுகொலை செய்யப்பட்டமையானது, சாதாரணமானதொரு சம்பவமாகக் கொள்ளத்தக்கதல்ல. இது நன்கு திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். இதற்குச் சிறிலங்கா அரசின் அனுசரணைகளோ அன்றி ஆசீர்வாதமோ இல்லாதிருக்க முடியாது.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமிழ்த் தேசியவாதத்திற்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தேசியவாதத்திற்கு வலுவூட்டும் ஆற்றல் கொண்ட புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் ஆகியோரை அழித்துவருதல் என்பதும் ஒன்றாகும். இந்தவகையில் கொழும்பில் மாமனிதர் குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் டி.சிவராமின் கொலை குறிப்பிடத்தக்கதாகின்றது.

டி.சிவராமின் கடத்தல்-படுகொலை என்பதைத் தொடர்ந்து சுதந்திர ஊடகவியலாளர்கள் சங்கம் உட்பட்ட பல அமைப்புக்கள் பலத்த கண்டனத்தை வெளியிடக்கூடும். சிலவேளைகளில் சில போராட்டங்களையும் அவை நடத்துதல் கூடும். ஆனால் இவற்றால் பயன் ஏதும் கிட்டுமா? தமிழ் ஊடகவியலாளர்களுக்குப் பாதுகாப்புக் கிட்டுமா? என்பதே கேள்வியாகும்.

ஏனெனில், இக்கடத்தல்-கொலை ஆகியவற்றிற்கு இவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டிய ஆட்சியாளர்களே காரணமாயுள்ளனர். இவற்றை அவர்கள் நேரடியாகவே செய்கின்றனர் அன்றி தமது ஏவலர்களான தமிழ்த் தேசவிரோதக்குழுக்களின் மூலம் செய்விக்கின்றனர். இதில் யார் செய்யினும்அரசே பொறுப்பாகும். இந்நிலையில் தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு எத்தகையதாக இருக்க முடியும்.? ஆனால் படுகொலைகள் மூலம் தமிழ் தேசியத்தைச் சிதைத்து விடலாம் என எண்ணுவது மடமையாகும்.

# சமாதான ஒப்பந்தத்திற்கு முரணாக படையினர் மறைமுக யுத்தம் புரிகின்றனர்

## -திருமலை தமிழ் மக்கள் பேரவை கண்டனம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சமாதான ஒப்பந்தத்திற்கு முரணான வகையில் தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா படையினர் மறைமுக யுத்தம் புரிவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள சமாதான ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் வகையில் சிறிலங்காவின் பாதுகாப்புப் படையினர் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர். மூதூர் கிழக்கு பிரதேசத்திலுள்ள மக்கள் மின்கலங்கள், சீமெந்து, கட்டடத்திற்கு தேவையான கனரகப் பொருட்கள் என்பவற்றை எடுத்துச் செல்வதற்கு கட்டைபறிச்சான் இராணுவ முகாமில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இராணுவ முகாம்களினூடாக செல்லுகின்ற மக்கள் உளரீதியாக பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சாம்பல்தீவு பாலத்திற்கு பக்கத்தில் உள்ள சல்லி, சாம்பல்தீவுக்குச் செல்லும் சந்தியில் அமைந்துள்ள பொது மக்களுக்குரிய பேருந்து தரிப்பிடத்தில் அத்துமீறி நிலைகொண்டுள்ள கடற்படையினர் ஆரம்பத்தில் ஒரு சோதனைச் சாவடி நிலையத்தை மட்டுமே அமைத்திருந்தனர்.

ஆனால் தற்போது மிகப்பெரிய அளவிலான இராணுவ முகாமாக உருமாற்றம் செய்யப்பட்டு ஆட்களை சோதனை செய்வதற்குரிய தகர மறைப்புக்கள் அமைக்கப்பட்டு காட்சியளிக்கிறது. இது தமிழ் மக்களை உளரீதியாக பயமுறுத்தும் ஒரு செயலாகும். அப்பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் இரவு நேரங்களில் குடிசனம் மிகுந்த பகுதிகளுக்குள் நடமாடித்திரிவதும் மக்களை அச்சுறுத்தும் பாணியில் எச்சரிக்கை விடுவதும் சாதாரண நிகழ்வாகமாறியுள்ளது. இச்செயல்களின் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் இயல்பு நிலையைக் குழப்புவதற்கு கடந்த காலங்களில் எவ்வாறு சிறிலங்காவின் பாதுகாப்புப் படையினர் செயற்பட்டார்களோ அதே போன்றதொரு நிலைப்பாட்டை தற்போது மேற்கொள்ள எத்தனிக்கின்றார்கள் என எண்ணுகின்றோம். இது சமாதானத்திற்கு மிகவும் ஆபத்தான விளைவை ஏற்படுத்தும். சமாதானம் நீடித்து நிலைப்பதனை அரசாங்கம் விரும்புமாயின் படையினரின் இத்தகைய ஒருதலைப்பட்சமான அடாவடித்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து கட்டைபறிச்சான் முகாமில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை உடனே நீக்க வேண்டும்.

அரசாங்கம் உடனடியாக இவ் விடயத்திற்கு தீர்வு காணாதவிடத்து சாத்வீகமான வழியில் மிகப்பெரிய அளவில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு சிறிலங்கா அரசாங்கத்தினதும் படையினரதும் சமாதானத்திற்கெதிரான செயற்பாடுகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவோமென கண்டிப்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு, சிறிலங்கா சனாதிபதி, சிறிலங்காவின் இராணுவத் தளபதி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# நான் நிரபராதியானால் எனக்கு கீழேயே ஜே.வி.பி யினர் செயற்பட வேண்டியிருக்கும்

## - மேல் மாகாண முதல்வர் றெஜினோல்ட் கூரே

(கொழும்பு)

தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து தாம் நிரபராதியாக்கப்பட்டால் அதன் பின்னரும் மாகாண சபையில் தமக்கு கீழேயே ஜே.வி.பி யினர் செயற்பட வேண்டியிருக்கும் என மேல் மாகாண சபையின் முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துரைக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி தம்மீது சுமத்தியுள்ள குற்றச் சாட்டுகள் தொடர்பில் சனாதிபதி விசாரணைக்குழு ஒன்றை அமைத்துள்ளார்.

அந்தக்குழுவும் தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யத் தமக்கு அவகாசம் தருமாறு சனாதிபதி பல முறை கேட்டுக்கொண்டபோதும் ஜே.வி.பி அதற்கு இணங்கவில்லை இந்த நிலையில் மாகாண சபையின் அமர்வு மூன்று வாரகாலப்பகுதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்குள் தம்மீதான விசாரணைகள் நிறைவடைந்துவிடும். இதன் போது தம் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தாம் பதவியில் இருந்து விலகவேண்டியேற்படும். இல்லையேல் தொடர்ந்தும் முதலமைச்சராக பதவியை தொடரமுடியும். அந்த வேளையில் தமது நிர்வாகத்தின் கீழேயே ஜே.வி.பி யினர் செயற்பட வேண்டியிருக்கும் என அவர் தெரிவித்தார். இதேவேளை மேல் மாகாண சபையின் அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டமையானது சனநாயக மறுப்புச் செயலாகும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

# மதமாற்றத் தடைச்சட்டத்தை விரைவில் அமுல்படுத்த மல்வத்த பீடாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

மதமாற்றத்தடைச்சட்டத்தை எந்த விதமான காலதாமதமுமின்றி விரைவில் அமுல்படுத்துமாறு மல்வத்தபீட திப்பட்டுவாவே சிறிசீர்தார்த்த சுமங்கல தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பௌத்த மதத்தவர்கள் ஏனைய மதங்களுக்கு மாறிவருவதாகச் சுட்டிக்காட்டியுள்ள திப்பட்டுவாவே சிறி சித்தார்த்ததேரர் எனவே மதமாற்றத் தடைச்சட்டத்தை சிறிலங்கா பாராளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பல்வேறு மதச்சார்பான அமைப்புக்கள் அப்பாவி பௌத்த மக்களை மதம் மாற்றிவருவதாகவும் அவர்களையும் நாட்டிலுள்ள பௌத்த பாடசாலைகளையும் பாதுகாப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இதேவேளை, பாடசாலை அதிபர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் காணப்பட்டால் அவற்றை விசாரணைக்குட்படுத்தி சரியான தீர்வொன்றினை வழங்க வேண்டுமெனவும் மல்வத்ததுவபீட திப்பட்டுவாவே சிறிசிர்தார்த்த தேரர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (32)

# புகையிரதக் கடவை விபத்தில் தொடர்புடைய சாரதி,நடத்துநர் மீது கொலைக் குற்றச்சாட்டு வழக்கு!

## - சிறிலங்கா பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

அளவ்வ கங்கல்மோதர புகையிரதக் கடவை மூடப்பட்டிருந்த வேளையில் கடவையின் அருகில் பேருந்தை செலுத்திக் கடக்க முற்படுகையில் பேருந்து இயங்காதபடியால் புகையிரதம் பேருந்தில் மோதி 35 பிரயாணிகள் பரிதாப மரணத்தைத் தழுவிக்கொண்டனர். இது சம்பந்தமாக பேருந்து ஓட்டுநருக்கும் அதன் உதவியாளருக்கும் எதிராகக்கொலைக் குற்றச்சாட்டு வழக்குத் தொடர்வதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானம் எடுத்துள்ளது. வாகனவிபத்துச் சம்பந்தமாக கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பேருந்து சாரதி, நடத்துநருக்கு எதிராக பொலிஸ் திணைக்களம் முதன் முதலாக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளது. தற்பொழுது நடத்துநரையும் சாரதியையும் பொலிஸ் திணைக்களம் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளது.

# சர்வதேச-உள்ளூர் அமைப்புக்கள்
# டி.சிவராம் கொலைக்கு கண்டனம்!

சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவராம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கு பல்வேறு உள்ளூர் சர்வதேச ஊடக அமைப்புக்கள், பொதுஅமைப்புக்கள் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் எனப பல தரப்பும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

சிவராம் மீதான தாக்குதல், கருதது் சுதந்திரம் பேச்சுச் சுதந்திரத்திற்கு எதிரான ஒரு தாக்குதல் எனவும் அனைத்துத் தரப்பினரும் வன்முறையில் ஈடுபடாமல் அவர்களுடைய வேறுபாடுகளைத் தீர்க்க வேண்டுமென வெளிநாட்டுப் பத்திரிகையாளர் அமைப்புக் கேட்டுள்ளது. சிரேஷ்ட ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் படுகொலையை இலங்கை ஊடகவியலாளர்கள் கண்டித்துள்ளனர்.

இதுவொரு கோழைத்தனமான இழிவான செயலென்றும் கருத்துக்களை வெளியிட இருக்கும் சுதந்திரத்தை அடக்க முனையும் செயலெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் சிவராமின் படுகொலைக்கு ஊடகவியலாளர் சங்கம், சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம், பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை ஊடகவியலாளர் பேரவை என்பன கண்டனம் தெரிவித்துள்ளன.

கொலையாளிகளைக் கைது செய்ய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென தராக்கி வாரம்தோறும் கட்டுரை எழுதி வந்த ஆங்கில இதழான டெய்லி மிரரின் ஆசிரியர் லலித் அழககோன் தெரிவித்துள்ளார்.

தனது கருத்துக்களைப் பயமின்றி வெளியிட்டமைக்காக சிவராம் மிகப்பெரிய விலையைக் கொடுத்துள்ளார் என சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கூறியுள்ளார்.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் சங்கம் இப்படுகொலைச் சம்பவமானது தமிழ் ஊடகத்துறையினருக்கு மட்டுமன்றி அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் விடுக்கப்பட்ட அச் சுறுத்தலாகும். இது அதிர்ச்சியையும், வேதனையையும் அளித்துள்ளது.

தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தன்மையை மிகவும் தெளிவாக சர்வதேச சமூகத்திற்கும் உள்நாட்டில் ஏனைய இனத்தவர்களுக்கும் எடுத்துக் கூறியவர் சிவராம் எனக் குறிப்பிட்டுள்ளது.

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த வருடம் மே மாதம் 31 ஆம் திகதி ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டார். இவ்வருடம் தலைநகர் கொழும்பில் டி.சிவராம் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதற்கான பொறுப்பை சிறிலங்கா அரசுதான் ஏற்க வேண்டுமென மட்டக்களப்பு ஊடகவியலாளர் சமூகம் தெரிவித்துள்ளது.

சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் ஊடகவியலாளர் ரிச்சர் டீ சொய்சா அரசியல் படுகொலை செய்யப்பட்டது போன்று ஊடகவியலாளர் டி.சிவராமும் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இப்படு கொலைச் சம்பவமானது கருத்துச் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும் எனக் கூறியுள்ளது.

தென் கிழக்கு செய்தியாளர்கள் சங்கம் அன்று யாழ்ப்பாணத்தில் ஊடக வியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையில் தொடங்கிய தமிழ் ஊடகவியலாளர் படுகொலை தொடரின் ஒரு கட்டமே இப் படு கொலையாகும். இதற்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதே கேள்விக் குறியாகும் எனக் கேள்வி எழுப்பியுள்ளது.

ஊடகவிலயாளர் சிவராம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருப்பதானது, உண்மைகளை தாக்குப்பிடிக்க முடியாமல் பொய்மை படுதோல்வி அடைந்து வருவதையே காட்டுகிறது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயுதப் போராளிகளைப் போன்று அதிக வீச்சுள்ளவர் ஒரு பத்திரிகையாளன் என்பதற்கு சான்றாக வாழ்ந்து காட்டியவர் சிவராம். நாடு முழுவதும் பரவலாக நடக்கும் கடத்தல்களையும், கொலைகளையும் அவதானிக்கின்ற போது சிறிலங்கா அரச நிர்வாகத்தின் வங்குரோத்து நிலையை இந்தபடுகொலை வெளிப்படுத்துகின்றது. அரசின் ஆதரவோடுதான் இப் படுகொலைகள் நடைபெறுகின்றன என்ற விடயம் உண்மையாகின்றது என்று தெரிவித்துள்ள பெ.சந்திசேகரன், எந்தக் கால கட்டத்திலும் அரசின் அடக்குமுறைகளுக்கு அடங்கிப் போகாமல் செயற்பட்ட சிவராமின் துணிகரமான பங்களிப்பு வரலாற்றில் மறக்க முடியாதவாறு நிரந்தரமாய் நிலைத்து நிற்கும் என்றும் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் ஊடகச் சுதந்திரத்திற்கும், பேச்சுச் சுதந்திரத்திற்கும் இக்கொலைச் சம்பவம் பலத்த அடியாக விழுந்துள்ளது என்று வன்னி ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

உண்மைகளைத் தெரிந்து கொண்டு சிவராமின் கொலையாளிகளை கண்டுபிடிக்கும் படி நாம் அரசிடம் கேட்டால், நாம் முட்டாள்களாகி விடுவோம் தமிழ்த் தேசத்தின் உரிமைக் குரலாக செயற்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வது நாம் சிவராமுக்கு செலுத்தும் அஞ்சலியாகும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித் துள்ளார்.

தமிழினத்தின் இன்னல்களையும் பேரினவாதத்தால் இழைக்கப் படுகின்ற அநீதிகளையும் உலகிற்கு எடுத்துக்காட்டிய உன்னத மனிதரை தமிழ் மக்கள் இழந்து தவிக்கின்றனர் என யாழ். மாவட்ட தமிழ்மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

(33,32,21)

## துணிந்து....

படுகொலை சனநாயகத்திற்கும், தனிமனித பேச்சு சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்ட கடுமையான அச்சுறுத்தல் என்றும் குறிப்பிட்டுள்ளார். சனநாயக சமுதாயத்தில், தனிமனித பேச்சுச் சுதந்திரம் ஒரு அடிப்படை உரிமை. இதைக் கட்டிக்காப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் கடுமையாக உழைக்க வேண்டும். இந்தப் படுகொலை, சனநாயகத்தின் மீதான ஒரு பலமான தாக்குதல். சமாதானத்தையும், சனநாயகத்தையும் பின்பற்றுவதாகக் கூறுபவர்கள், இத்தகைய தனிமனித பேச்சுச் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். சிவராமின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை, அவரது கொலை மூலம் சமாதான முயற்சிகள் பாதிப்படையாது என்று தாம் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஊடகவியலாளர்....

இணைந்து செயற்பட்டவர். அன்றிலிருந்து தனது இறுதிக் கணம் வரையிலும் தமிழின விடுதலையை நெஞ்சார விரும்பி தனது சிந்தனையையும் எழுத்தையும் முன்வைத்து வந்தவர்.

சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து தமிழரின் இனப்பிரச்சினைக்காக எத்தகைய தீர்வையும் ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது என்ற வலுவான கருத்தை தனது அனுபவத்தின் வழியாக வலியுறுத்தி வந்தவர் சிவராம். அத்துடன் தமிழ்த் தேசியத்தை கூர்மைப்படுத்த வேண்டும், அதனைப் பலப்படுத்த வேண்டும் என்னும் உயரிய நோக்கோடு வாழ்ந்தவர்.

தமிழ்த் தேசியம் பலத்தோடு வளர்த்துச் செல்லப்பட வேண்டும் எனக்கூறி தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் தலைமையை ஆதரித்தவர் டி. சிவராம்.

சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து தெளிவற்ற முறையில் கற்பிதங்களை மக்களிடம் உருவாக்கும் போக்கு தமிழ் ஊடகத் துறையின் தவறாகும் எனச் சுட்டிக் காட்டியவர். அதேவே[illegible]ல் சமாதானத்தை தமிழர்க[illegible]கு ஒரு பொறியாக மாற்றமுனை[illegible]ம் சந்தர்ப்பங்களை அம்பலப்ப[illegible] வேண்[illegible] அதுவே தமிழ் ஊ[illegible]கங்களின் இன்றைய பணி என்றும் சொல்லி வந்தவர்.

தமிழ் ஊடகவியலாளர்கள் தம்மை நவீன தகவல் தொழில் நுட்பத்திலும், தொடர்பாடலிலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று சிவராம் தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் வலியுறுத்தி வந்தார். தமிழ் ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில் சிவராம் ஒரு நல்ல தோழமையாளனாக பத்திரிகைத்துறையில் பலருக்கும் முன்னோடியாளனாக இருந்து ஊடகத்துறையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்.

எப்போதும் பக்கச் சார்புகள் இல்லாமல் தனது விமர்சனங்களை முன்வைத்து வந்த நல்லதொரு பண்பாளர் சிவராம் அவர்கள். கொழும்பில் கொலை மிரட்டல்கள், குடியிருப்பதற்கான அச்சுறுத்தல்கள் எனத் தொல்லைகள் தொடர்ந்த போதும் அவற்றைக் கண்டு பின்வாங்காமல் சிங்களப் பேரினவாதத்தை அம்பலப்படுத்தி வந்தவர்.

நிமலராஜனையோ, நடேசனையோ, தன்னையோ கொல்வதன் மூலம் தமிழ்மக்களின் போராட்டக் கருத்தினை மழுங்கடித்து விட முடியாது என்பதை கொலையாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று, தனக்கு வரக் கூடிய அபாயத்தை ஏற்கனவே உணர்ந்து கூறி வந்தவர். ஆனாலும், தனது கருத்துக்களையோ நிலைப்பாட்டினையோ தளர்வேதுமில்லாமலே இறுதிவரை உறுதியுடன் தொடர்ந்து வந்தார். தனது குடும்பம், தனது சுய பாதுகாப்பு என்பவற்றைக்கூட பெரிதெனக் கருதாமல் ஒரு நல்ல புகழ் வாய்ந்த தமிழ் ஊடகவியலாளராக உழைத்து வந்தவர் சிவராம்.

ஊடகவியலாளர் சிவராம் ஏற்கனவே பல தடவைகள் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையின் கொலை மிரட்டல்களை எதிர்நோக்கியுள்ளார். அவரது கொழும்பு இல்லமும் சோதனைக்குள்ளாகியது. இக்கொலையானது கொழும்பின் உயர் பாதுகாப்பு பகுதியுள் நடைபெற்றுள்ளது. எனவே, இக் கொலைக்கு சிறிலங்கா அரசும் அதன் படைகளுமே பொறுப்பாகின்றன.

சிவராமின் உறுதியையும் அவருடைய கருத்து நிலைப்பாட்டினையும் அவருடைய விரிந்த செயல்களையும் பொறுத்துக் கொள்ள முடியாத சக்திகள் இன்று அவரைக் கடத்திக் கொன்றிருக்கின்றன.

படுகொலையில் சிவராம் அவர்களை இழந்து நிற்கும் அவரது மனைவி, பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிக்கிறோம். அவர்களுடைய துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

## சிவராம் படுகொலையை ஆட்சேபித்து
## யாழ். இல் எதிர்ப்புப் போராட்டம்
### -ஊடகவியலாளர்கள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பிரபல தமிழ் ஊடகவியலாளர் சிவராம் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்த யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

தமிழ் தேசியத்திற்கான தமது ஊடகப் பங்களிப்பினைச் செலுத்தி வரும் தமிழ் ஊடகவியலாளர்கள் தமிழின விரோதிகளால் காலத்திற்குக் காலம் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இந் நிலைமை மாற்றப்ப
தமிழ் ஊடகவியலாளர்க
உரிமைகளையும், பாதுகாப்பி
யும் உறுதி செய்யும் முகமாக
சாங்கம் சரியானதொரு முடிவி
எடுக்க வேண்டும் என்பதை
யுறுத்தியே இப்போராட்டம்
தப்படவுள்ளது.

இதற்காக அனைத்து
குடாநாட்டு ஊடகவியலாளர்க
ஒன்றிணைந்து நடவடிக்கை
எடுத்துள்ளனர்.

## மோ. போ. திணைக்கள நடமாடும்சே
## இன்று நண்பகல் வரை நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் கிளிநொச்சி மாவட் டத்தில் நடாத்தப்பெற்றுவரும் நடமாடும் சேவை இன்று நண்பகல் வரை நடைபெறவுள்ளதென மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் பி.விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றையதினம் நடைபெற்ற சாரதிகளுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்குரிய பதிவு நடவடிக்கைகள் மட்டும் இன்று நண்பகல் 12.00 மணி வரை நடைபெறவுள்ளதெனவும் பயன் பெறவுள்ளவர்கள் இன்று காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலகத்திற்கு சமூகமளிக்கும் வண்ணம் கிளி
மாவட்ட அரசஅதிபர் தி.இர
யகம் வேண்டியுள்ளார்.

மேலும் நேற்றைய தினம்
பெற்ற நடமாடும் சேவையின்
சாரதி களுக்கான எழுத்துப்பரீ
செயன்முறைப் பரீட்சை ம
மோட்டார் வாகனப் பதிவு எ
இடம்பெற்றது. நேற்றைய
மட்டும் 925 பேர் மேற்படி நட
சேவையின் மூலம் பயன்பெ
ளனரென கிளி.அரசஅதிபர்
வித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தி
வருடங்களுக்குப் பின்பு
தடவையாக நேற்றைய
இலகு வாகனங்களுக்கான
முறைப் பரீட்சை இடம்பெற
குறிப்பிடத்தக்கது.

## வென்னப்புவ அ.வங்கி
## ஆயுததாரிகள் கொள்

(கொழும்பு)

வென்னப்புவஹரிமெத்தியாவ வளம்ப அபிவிருத்தி
தங்க நகைகள் மற்றும் பத்து இலட்சம் ரூபா பணம் என்ப
தாரிகளால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் நடந்த இந்தத் துணிகரக் கொள்ளையின்
ஆயுதங்கள் சகிதம் வங்கியினுள் நுழைந்த கொள்ளையர்கள்
களையும், வாடிக்கையாளர்களையும் அறை ஒன்றினுள் பூட்டி
முகாமையாளரையும் கத்தியால் குத்தி விட்டு, அங்கிருந்த
ஆபரணங்கள் மற்றும் பத்து இலட்சம் ரூபா பணத்தினையும்
ளையிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இதன் போது காயமடைந்த வங்கி முகாமையாளர்
வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள

## உதவி...

இக்கூட்டத்தின்போது பிரதிநிதிகள் பொதுக்கட்டமைப்பின் அவசியம் குறித்து வலியுறுத்தினால் என்ன நிலை எனக் கேட்கப்பட்டதற்கே நிதியமைச்சின் செயலாளர் இவ்வாறு பதிலளித்துள்ளார். இக் கூட்டமானது இலங்கையின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு நடத்தப்படும் ஒன்றென்பதால் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எவ்வித அழுத்தங்களையும் இலங்கை மீது பிரயோ
எனக் குறிப்பிட்டார். நிதிய
செயலாளர் பொதுக்கட்ட
ஏற்படுத்துவதா இல்
என்பதை அரசியல்வாதி
மானிப்பார்கள் என்றும்
கட்டமைப்பு இல்லாவி
வடக்குக் கிழக்கிற்கான
ருத்தி நடவடிக்கைகள்
யாக மேற்கொள்ளப்படும்
யமைச்சின் செயலாளர்
சுந்தர மேலும் தெரிவித்தா

## கடத்தப்பட்ட...

வாகனத்தில் வந்தவர்கள் இவரைப் பலவந்தமாக வாகனத்தில் கடத்திச் சென்றிருந்தனர்.

கடத்தப்பட்ட இவர் தாக்கப்பட்ட பின்னர் வாகனமொன்றில் கொண்டு வரப்பட்டு அவ்விடத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

ஒன்பது மில்லி மீற்றர் துப்பாக்கியால் தலையில் சுடப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் இருந்து இரண்டு வெற்றுத் தோட்டாக்களை சிறிலங்காப் பொலிசார் மீட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற இவரது மனைவியான யோகராணி (வயது 40) மற்றும் மகள் வைஷ்ணவி (வயது 16) ஆகியோர் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர். இவர்களுடன் ஏனைய பிள்ளைளான வைதேகி, சேரலாதன் மற்றும் உறவினர்களும் அவ்விடத்திற்குச் சென்று சடலத்தை
யாளம் காட்டினர்.

மட்டக்களப்பு புனித
கல்லூரியில் தனது க
முடித்துக் கொண்ட டி.
அவர்கள் 1980 இல் ய
கலைக்கழகத்திற்கு அனும
றிருந்தார். பல்கலைக்கழ
வராக இருந்த காலத்தில்
அமைப்பில் தன்னை இ
கொண்டார்.

பின்னர் அவ் அ
இருந்து விலகிய அவர்
ஊடகவியலாளராக ஊடக
குள் நுழைந்தார்.

ஆங்கிலத்திலும், த
இராணுவ அரசியல் கட்டு
எழுதி வந்த இவர் இ
தமிழ்நெற் இணைய
தன்னை இணைத்துக் கொ
தார். அத்தோடு தமிழ்த் தே
வலியுறுத்தித் தமிழிலும்
கள் எழுதி வந்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது